விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆடி 4 ஷவ்வா 12 இதழ் 159
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (20—7—86)

மட்டக்களப்பில்

## உலக வங்கி உதவியுடன் ஆரம்பித்த நீர்ப்பாசன வேலைகள் நிறுத்தம்!

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

உலகவங்கி நிதி உதவித்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன வேலைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்குப்பகுதிகளில் இடம் பெறும் வன்முறைச்சம்பவங்களைத் தொடர்ந்து உலகவங்கி நிதி வழங்க மறுத்துவிட்டதே இதற்குக் காரணம் என அறியப்படுகிறது.

இந்த நிதி உதவித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே நடைபெற்று வந்த வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் புதிதாக எந்த வேலைகளும் தொடங்க வேண்டாம் என்றும் அறிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் வனபரிபாலன திணைக்களமும் எந்த இன மரவளர்ப்புக்கும் நிதி உதவி வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## இனப்பிரச்னை குறித்து—

# ஜனாதிபதியுடனான பேச்சுக்களை உடன் நிறுத்தவேண்டும்

## கூட்டணிக்கு, ஈழ.தே.வி.மு. வேண்டுகோள்

சென்னை ஜுலை 19

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் மேற்கொண்டுள்ள நேரடிப் பேச்சு வார்த்தைகளை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்" என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனவுக்குமிடையே நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள் குறித்து ஈழ தேசிய விடுதலை முன்னணி நேற்று முன்தினம் சென்னையில் கூடி விரிவாக ஆராய்ந்தது.

இதன்பின்பே மேற்படி முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுவரும் வேளையிலேயே படையினரால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு வருவதாகவும் முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்னை குறித்து ஜனாதிபதியுடன் நேரடிப் பேச்சுக்கள் நடாத்தும் முகமாக கடந்த 12ம் திகதி ஐந்துபேர் கொண்ட கூட்டணிக்குழுவினர் இலங்கை சென்றுள்ளது தெரிந்ததே. [ரா]

## யாழ்ப்பாணம் நோக்கி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து 16 வாகனங்களிலும் நடந்தும் 200-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த போது 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கப் போராளிகள் நேற்று நண்பகல் பரந்தன் சந்தியில் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டதில் இராணுவத்தினர் தரப்பில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகி

(11ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை நிறுத்தக்கோரி சட்டத்தரணிகள் சங்கம் தந்தி

மாவிட்டபுரம், சனி

கொழும்பில் ஜனாதிபதியுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளை நிறுத்தும்படி கோரி மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம் தமிழர் விடுதலை கூட்டணி தலைவருக்கு தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்க விசேட கூட்டம் திரு அ குமரகுரு தலைமையில் நேற்று நடைபெற்ற சமயம் பேச்சுவார்த்தை பற்றி ஆராயப்பட்டது.

இதையடுத்து தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம், இந்திய உயர் ஸ்தானிகர் மூலம் இந்தியப் பிரதமர் திரு ராஜிவ் காந்தி ஆகியோருக்கு தந்தி மூலம் அனுப்ப நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

கொழும்பில் இனப்பிரச்சனை தீர்வுக்காக அரசும், தமிழர் விடுதலை கூட்டணியும் பேச்சுவார்த்தை நடாத்தும் இந்நேரத்தில் அப்பாவித் தமிழ் குடிமக்கள் ஏராளமாக ஊர்காவல் படையினராலும், இராணுவத்தினராலும் கொலை செய்யப்படுவது தமிழ் மக்களை பயமுறுத்தி அரசின் திட்டத்துக்கு இணங்க வைக்கும் நோக்குடன் புரியப்படும் செயலாகத் தோன்றுகிறது.

ஆகவே தமிழ் இனப்படுகொலைகளும், தமிழருக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அட்டூழியங்களும் அறவே ஒழிக்கப்படும்வரை பேச்சுவார்த்தையை நிறுத்தி வைக்க வேண்டும். பேச்சுவார்த்தை இக் கட்டத்தில் தொடர்வது தமிழ் மக்களின் சுயமரியாதையை அவமதிப்பதாகும்."

## வவனியாவரை புகையிரதசேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று முதல் கொழும்பிலிருந்து வவனியாவரை யாழ்தேவி சேவை நடைபெறும்.

மருதானையிலிருந்து காலை 5-30 மணிக்குப் புறப்படும் யாழ்தேவி வவனியாவை வந்தடைந்து அங்கிருந்துபிற்பகல் 2-40 மணிக்குகொழும்பு புறப்படும்.

இந்நேர அட்டவணைப்படி தினமும் யாழ்தேவி சேவை நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ]

## ஹெலியிலிருந்து துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி, நாவற்குழிப்பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை வானத்தில் பறந்து சென்ற ஹெலிக்கொப்டரிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன

யாழ்ப்பாண விவசாயிகளே தமிழ் மக்களே தமிழீழமாணவர்களே என்றதலைப்புக்களிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களே இப்பகுதியில் வீசப்பட்டவையாகும். [து]

## இனப்பிரச்னை தீர்க்கமானமுடிவுவரும்வரை கூட்டணி பேச்சு நடத்தும்

### — அமிர்

கொழும்பு, சனி

"இனப்பிரச்னைக்குத் தீர்க்கமான ஒரு முடிவு ஏற்படும்வரை ஜனாதிபதியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுக்கள் நடத்தும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

"தற்போதைய சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டால், இனப்பிரச்னைக்கு ஒரு அமைதியான தீர்வுகாண வெகுநாட்கள் நீடிக்கும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை 'இனப்பிரச்னைத் தீர்வு சம்பந்தமான யோசனைகள் குறித்து ஜனாதிபதிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி குழுவினருக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுக்கள் நல்ல திருப்பத்தை கொடுத்துள்ளது' என்றுதேசிய

(11ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டிலிருந்து பயணிகளுடன் செல்லும் வாகனங்கள் அனுமதிப்பத்திரம்பெற தேவையில்லை

### —பிரிகேடியர் ரூபசிங்கா

யாழ்ப்பாணம், ஞாயிறு.

யாழ். குடா நாட்டில் இருந்து வெளியேயும், வெளியிலிருந்து யாழ் குடாநாட்டிற்கும் பிரயாணிகளை ஏற்றிப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கு இராணுவ அனுமதிப் பத்திரங்களை பெறவேண்டும் என்ற நிபந்தனை கடந்த 19ம் திகதியிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி பிரிகேடியர் ஏச். எவ் ரூபசிங்கா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் பொருட்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்களின் சொந்தக்காரர்கள் வாகன உத்தரவு அனுமதிப்பத்திரங்களை அண்மையிலுள்ள பாதுகாப்பு முகாம்களிலிருந்து பெறலாம் என்றும் இவர்கள் அனுமதிப் பத்திரங்களைப் பெறச் செல்லும் போது பொருட்களுடன் லொறிகளை பாதுகாப்பு முகாமுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எனவும் அவர் இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தேக்கு அல்மாரி. Nursery அல்மாரி, கட்டில்கள், Bab-Cot, National Blender, Akai செற், Sharp டெக்செற், Rice குக்கர், கிளாஸ் வகைகள், பித்தளைக்கிடாரம், Formica சாப்பாட்டு மேசை, கதிரைகள், கண்ணாடி மேசை, Showcase மற்றும்பல உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தி). (C-3547)

நல்ல நிலையிலுள்ள நஷனல் 20'' கலர் T. V. மற்றும் நஷனல் றைஸ்குக்கரும், விற்பனைக்குண்டு. 18, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். C-3513

புதிய நஷனல் (National) N. V. 450 டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. தெய்வேந்திரராஜா, அரசடிலேன், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. [C 3561]

நல்ல இன ''லவ் பேட்ஸ்'' (Love Birds) விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: அண்ணா பாம், இணுவில். [A-941]

அல்சேஷன் தனி ரக நாய்க்குட்டிகள் குறைக்கப்பட்ட விலையில் விற்பனைக்குண்டு. ஐந்து கிழமைகள். திருநெல்வேலி சிவன் கோவில் வீதி, கோவில் வீதி சந்தி. 181 Temple Road Nallur (C 3495)

தமிழ் தட்டச்சு யந்திரம் [Remingtion Standard Typewriter] உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி (3-ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். [C3563]

தாவடி மானிப்பாய்வீதியில் பத்திரகாளி கோவில் அருகாமையில் மின்சார வசதியுள்ள 2 படுக்கை அறை வீட்டுடன் 19 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விவசாயம், விலங்கு வேளாண்மைக்கும், ஆலைகள் அமைக்கவும் உகந்தது. தொடர்பு: அ. ஸ்ரீகரன், ''சுதுமலை வைத்தியம்'' சுதுமலை, ஆனைக்கோட்டை. [C3585]

HONDA C 90 Recon. Unregistered ரூ 8000/- சிங்கர் ElectrtcPattern Makingதையல் மெஷின் ரூ. 3500/-, வயலின் சிறியது ரூ 1000/-, 3-6 மணி, ஸ்கந்தராசா கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை [C 3566]

வீட்டுத் தளபாடங்கள், கட்டில்கள், சாப்பாட்டு மேசை, ஹோல் கதிரை செற், ஏனைய பொருட்களும் விற்பனைக்குண்டு மா. ஜெகன்மோகன், 81, K.K.S வீதி, கொக்குவில். (C 3578)

## EDUCATION

Computer programming- If you want to be a professional, get yourself trained by a Professional Don't worry. Patrician Institute has a professional to train you. If you are interested to learn French or Hotel Management, Patrican Institute can help you. Patrician Institute, 59, College Road, Jaffna. (A 1002)

## தேவை

டாக்டர் வசிப்பதற்கு 3 அறைகளுடன் கூடியவீடு வாடகைக்குத்தேவை வீடு ஆஸ்பத்திரிக்கு சமீபமாக பலாலி, பருத்தித்துறை, காங்கேசன்துறை வீதியில் அல்லது சுண்டுக்குளிப்பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். விபரங்களுக்கு விளம்பர இல. C3497, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-3497]

இறைச்சிக்கான கோழிகள் எதுவாய் இருந்தாலும் உடன் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: அண்ணா பாம், செம்மாதெரு; அண்ணா பாம், இணுவில். [A-940]

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நன்கு அனுபவமுள்ளவர்களும் வேலைபழக விரும்புவோரும் தேவை. மூன்று மைல் சுற்றுடலுக்குள் வசிப்பவர்கள்விரும்பத்தக்கது. தொடர்பு: City Enterprises, No 198B கஸ்தூரியார்றோட், யாழ்ப்பாணம். [C-3539]

வீட்டுத் தளபாடங்கள், தையல்மெசின் என்பன வீட்டுப்பாவிப்புக்குத் தேவை. தொடர்பு:- W வியோ Tailor மெயின் வீதி, யாழ்ப்பாணம். (Dr பிலிப் டிஸ்பென்சறிக்கு முன்பாக). [C-3549]

யாழ். நகரில் வளர்ந்துவரும் ஒரு ஹோட்டலுக்கு Stewards—Cooks தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வருக. Old Park Chinese Restaurant 207, Old Park Road, Jaffna. C 3470

கூரைக்குப்போடும் புதிய தட்டோடுகள் உடனடியாகத் தேவை. கையிருப்பிலுள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும் 120, அரசடி றோட், சந்தர்மடம். தொலைபேசி: 238 8 [C-3523]

உத்தியோகம் பார்க்கும் இளம் குடும்பத்தினருக்கு மூன்று மாதக் குழந்தையையும், வீட்டையும் பராமரிப்பதற்கு நற்குணமுள்ள ஒரு பணிப் பெண் தேவை தொடர்பு: 443, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C 3557)

பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர் தேவை. வயது 40 க்கும் 60 க்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும். சிமாட்டி, ரெக்ஸ்ரையில், 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [C 3564]

1 ஸ்ரீக்கு மேற்பட்ட மொறிஸ்மைனர் 1000 உடன் தேவை தொடர்பு: M. பத்மநாதன், பத்மநாதன் கராஜ், மானிப்பாய் றோட், ஆனைக்கோட்டை. [C 3528]

சிறந்த வடமராட்சி, தீவுப்பகுதி நாட்டுப் புகையிலை உற்பத்தி செய்வோரிடம் தொகையாகப் பெற்றுத் தரகு அடிப்படையில் விற்றுக்கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும், விளம்பர இல: C3584 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C3584]

## தேவை

யாழ். நகரில் உள்ள எமது அச்சகத்திற்கு அனுபவம் மிக்க மெஷின் மைன்டர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்: யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், (C 3567)

பளையில் இயக்கச்சியில் மரமுந்திரிகைச் செய்கைக்கு உகந்த காணிகள் தேவை கைவிடப்பட்ட தோட்டங்கள், காட்டுக் காணிகள் விரும்பத்தக்கது. முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். ரோரஸ் நில அளவைகள் Raju Stores 67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [C-3537]

## வாடகைக்கு

கொக்குவில் சந்திக்கருகில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு, கடைகள் வாடகைக்குண்டு. (அலுவலக பாவனைக்கும் வழங்கப்படும்) மா. ஜெகன்மோகன், 81, K K.S வீதி, கொக்குவில். (C 3577)

## வகுப்புகள்

Computer Programming (Basic Radio T.V. repairing. Wiring, Draughtsmanship வகுப்புகள் ஆரம்பம் 23--7-86 புதன், 26-7-86 சனி விபரங்கட்கு: Able Technical Studies [Jet motors மேல்மாடி] K. K. S. Road, Chunnakam. [C-3522]

இதோ! ரியூசன் எல்லாப் பாடத்திலும் அனுபவ ஆசிரியர்கள் தயார். பாடங்களையும் வகுப்புகளையும் குறிப்பிடவும். தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C3589]

## தவறிவிட்டது

செல்வி நிர்மலா பாலசுந்தரம் திகிரி புலோலி கிழக்கு பருத்தித்துறை என்பவருடைய அடையாள அட்டை 11-07-86 வவனியா யாழ்ப்பாணம் பஸ்சில் அல்லது கொடிகாமத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு ஒப்படைக்கவும், [C-3583]

நயினாதீவைச் சேர்ந்த கந்தசாமி நாகராஜேஸ்வரி [A/L பரீட்சைக்கு தோற்றும் மாணவி] என்பவரின் அடையாளஅட்டை யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 234, ஸ்ரான்லி வீதியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C-3573]

## மணப்பந்தல்

இதோ! கவலை வேண்டாம். மங்கள ஏஜென்சி 80% மங்கள ஏஜென்சியை நாடியவர்கள் நல்ல திருமணத்தை அடைகிறார்கள். எம்மிடம் எல்லா இனம் மதத்திலும் வெளிநாட்டிலும் மணமக்கள் இருக்கிறார்கள். தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (C3587)

இந்துவேளாளர் குற்றமுள்ள படித்த மணப்பெண்ணுக்கு 35—45 வயதுக்கிடைப்பட்ட T.A., Bank, ஆசிரியர்அல்லது ஒத்துவரக்கூடிய மணமகன் தேவை. உத்தியோகமான இளைய சகோதரனோடு மாற்றுச் சம்பந்தத்தையும் யோசிக்கலாம். சீதனம் பேசித்தீர்கலாம். சைவபோன மணமக்களும் தொடர்பு கொள்ளலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C3588]

கொழும்பில் படித்த இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 34 வயது நிரம்பிய மணமகளுக்கு, மணமகன் தேவை. சீதனமாக கொழும்பில் வீடும், காசு, நகை என்பனவும் கொடுக்கப்படும். விவாகரத்து செய்தோரும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிககலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: திருமதி இளையதம்பி, 19, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C 3500)

## சேவை

தட்டச்சு யந்திரம் (Type-Writers) சிறந்தமுறையில் திருத்திக் கொடுக்கப்படும். விலைக்கும் வாங்கப்படும். Fudo Enterprise. 39/17, மின்சார நிலைய வீதி, (3-ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். (C 3507)

யாழ் நகரில் தரமான ''போட்டோஸ்ரற்'' பிரதிகள் தெளிவான ''றோனியோ'' பிரதிகளைத் திருப்தியான முறையில் பெற்றுக்கொள்ள; கிளீன்கட், 239, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (C 3488)

ரான்ஸ்போமர், மோட்டர்' மின்விசிறி, அடுப்பு, கிறைண்டர், வாசிங்மெசின், ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன திருத்த, றீவைண்டிங்செய்ய, வீட்டு வயறிங்செய்ய ஒமேகா, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும். (C-3552)

நவீன யந்திரமூலம் அனுபவ மிக்க தொழிலாளர்களினால் கச்சான் முழுப்பருப்பாக மொத்தமாகவும், சில்லறையாகவும் உடைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: M G M 777, K K. S. Rd, Jaffna. T. P:- 22611. [A-926]

திரிபேஸ், சிங்கிள் பேஸ் Electrical வயரிங், மோட்டர் பம், ஜெனரேட்டர் என்பன Contractors சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். 20, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [C-3548]

## இருளில் அல்லைப்பிட்டி கிராமம்

வேலணை. வெள்ளி

அல்லைப்பிட்டி கிராமப் பகுதி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மின்சார விநியோகமின்றி இருளில் மூழ்கியுள்ளது.

சட்ட விரோத மின் பாவனையாலும், மின் மாற்றியில் வெளியார்கள் திருத்த வேலைகளில் ஈடுபட்டதாலுமே இப் பகுதிக்கான மின் மாற்றி எரிந்துள்ளதாக வேலணைப் பகுதி மின்சார அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோத மின் பாவனையை கைவிடுமாறு பல தடவைகள் எடுத்துக் கூறப் பட்ட போதும் சட்ட விரோத மின் பாவனையாளர்கள் இதனை கைவிடாதது வருந்தத்தக்கது.

எனினும் புதிய மின் மாற்றியை சுன்னாகத்திலிருந்து அல்லைப்பிட்டிக்கு கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் மேலும் எவ்வளவு நாட்கள் இப்பகுதி இருளில் மூழ்கியிருக்குமென்பது தெரியாத நிலையிலுள்ளது.

## சிசுக்களுக்குப் பயன்படும் பொருட்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம். வெள்ளி

யாழ். ஆஸ்பத்திரியின மகப்பேற்றுப் பிரிவுக்கு யாழ். றோட்டறிக்கழகத்தின் பெண்கள் அமைப்பின் இன்னர் வீல்' சார்பில் உடன்பிறந்த சிசுக்களுக்குத் தேவையான பொருட்கள்அடங்கிய 50 பார்சல்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டுள்ளன.

வசதியற்ற குடும்பத் தாய்மார்களுக்கு இவை பேருதவியாக இருக்கும் என்று கருதப் படுகின்றது.

## இயக்கங்கள் ஒன்றுபட வேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''பொது வேலைத்திட்டத் தினடிப்படையில் இயக்கங்கள் ஒற்றுமைப்பட வேண்டும்'' என்று நேற்று யாழ் பல்கலைக் கழக மாணவரவை நடத்திய ஊர்வலத்தைத் தொடர்ந்து நடந்த பொதுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது

இக் கூட்டத்தில் வடக்குக் கிழக்கு இணையாததிட்டத்தை கண்டித்தும், மாகாணசபைத் தீர்வை எதிர்த்தும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன,

மூதூர், அடம்பன், நெடுங்கேணியில் இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழ், முஸ்லீம் மக்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக சமீபததில் இறந்த பொதுமக்களுக்கும் இதுவரை இறந்த எல்லாப் போராளிகட்கும் 2நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது,

## WANTED

A leading private school in Jaffna requires full /part-time lecturers in Nursing. Very attractive terms: Apply Advt. No. C 3501 C/o Eelanadu, Jaffna. (C 3501]

## சேவை

வெளிநாடு செல்வதாலோ வேறு காரணத்தாலோ உங்கள் காணி, வீடு, தளபாடங்கள், மின் உபகரணங்கள் வாகனங்கள் போன்ற எதனையும் விற்க நீங்கள் விரும்பினுல் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் சிரமமின்றியும் விரைவாகவும் நல்ல விலையிலும் உங்கள் பொருள்களை விற்க ஒழுங்கு செய்வோம். Mack Auctioneers and Brokers, No: 8, 1st Lane, PointPedro Road, Jaffna. Te: 24791, 24836. A 932

பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விபரீத விளையாட்டா? ...விபரீதவிளையாட்டா?...விபரீதவிளையாட்டா?...விபரீதவிளையாட்டா?...

# காமன்வெல்த் போட்டிகளும் பகிஷ்கரிப்பு ஈட்டிகளும்

**20-ம்** நூற்றுண்டின் இறுதிப் பகுதியை நாம் அண்மித்துள்ள வேளையில் அரசியலில் புகுந்து குழப்பம் விளைவிக்காத இடமே இல்லையெனலாம். சர்வதேச ரீதியாக வர்த்தகத்தில், உதவிகளில் நாடுகளுக்கு வழங்கப்படும் கடனில் ஒரு நாட்டின் அரசு இன்னெரு நாட்டின் அரசுக்கு அளிக்கும் ஆதரவு இவையெல்லாவற்றிலும் அரசியல் கலந்துள்ளது.

இந்த அரசியலின் சக்திவாய்ந்த பிடிக்குள் இப்போது அகப்பட்டிருப்பது விளையாட்டுத்துறையாகும்.

1980 ம் ஆண்டு மாஸ்கோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை, மாஸ்கோ ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவியதைக் காரணங்காட்டி அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் பகிஷ்கரித்தன 84-ம் ஆண்டு லொஸ் ஏஞ்சலிஸ் ஒலிம்பிக் போட்டிகளைத் தமது வீரர்களின் பாதுகாப்பைக் காரணம்காட்டி ரஷ்யாவும் நேசநாடுகளும் பகிஷ்கரித்தன.

இப்போது 86-ம் ஆண்டின் பிரிட்டிஷ் 'காமன்வெல்த்' [பொதுநலவாய அமைப்பு] விளையாட்டுப் போட்டிகளை தென்னுபிரிக்காவின் இனவாத அரசுக்கெதிராக பிரிட்டிஷ் அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்காததையிட்டு பகிஷ்கரிக்கப் பலநாடுகள் தீர்மானித்துள்ளன.

## 'காமன்வெல்த்' போட்டிகள்

பிரிட்டனின் குடியரசு நாடுகளாக இருந்த. இருந்துவரும் நாடுகளின் அமைப்பு காமன் வெல்த் அமைப்பாகும். இப்போது இதில் 49 நாடுகள் அங்கம் வகிக்கின்றன

இவ்வமைப்பின் அங்கத்துவ நாடுகளிடையிலான விளையாட்டுப்போட்டிகள் 4 வருடங்களுக்கொருமுறை நடைபெறும. இத்தகைய காமன் வெல்த் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுள் பெரும்பாலானவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளாகும்.

சர்வதேச ரீதியில் நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டிகள் போன்றவற்றில் கலந்து வெற்றிபெறக் கூடியளவு சக்தி வாய்ந்தவையல்ல. அவர்கள் தமது திறமையைக்காட்ட 'காமன்வெல்த்' போட்டிகள் போன்றவை சிறந்த பணியாற்றிவருகின்றன.

சடைசியாக காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 82-ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பேன் நகரில் நடைபெற்றன. 46 நாடுகளைச் சேர்ந்த 2154 விளையாட்டு வீரர்கள் இதில் பங்குபற்றின.

## இம்முறை

86 ம்ஆண்டுக்கான போட்டிகள் ஸ்கொட்லாந்து நகரின் தலைநகரான அடின்பரோவில் இம்மாதம் 24-ம் திகதி ஆரம்பமாகவுள்ளன. 49 நாடுகளைச் சேர்ந்த சுமார் 3100 வீரர்கள் இதில் பங்குபற்ற இருந்தனர்.

**இ. செந்தில்**

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சரின் செல்வாக்கு நாட்டில் கணிசமானளவு குறைந்துள்ளது. வேலையில்லாதோரின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகிறது. விலைவாசிகள் உயர்ந்துள்ளன; இவைபோன்ற பிரச்னைகளால் பிரிட்டிஷ் மக்கள் தாட்சரின் மீது அதிருப்தி கொண்டுள்ளனர்.

இந்த காமன்வெல்த் போட்டிகளை வெகுசிறப்பாகவும் திறமையாகவும் நடத்துவதன்மூலம் நாட்டு, உலக மக்களினது மனதில் தனது நிலையை உயர்த்திக்கொள்ள நினைத்தார் திருமதி தாட்சர் அதற்கேற்றவாறு இப்போட்டிகளை சிறப்பிக்க நடவடிக்கைகள் எடுககபபட்டுவந்தன; வருகின்றன.

இவையனைத்தும் வீணுகிப் போகக்கூடுமென்ற அச்சம் இப்போது உருவாகியுள்ளது.

## காமன்வெல்த்தும் தென்னுபிரிக்காவும்

தென்னுபிரிக்காவுக்கெதிராக உலகளாவிய ரீதியில் பொருளாதார தடைகள் விதிக்கப்பட வேண்டும்மெனக் கோரிவரும் நாடுகளில் காமன் வெல்த் அமைப்பைச் சேர்ந்த நாடுகள் முக்கியவானவை.

தென்னுபிரிக்காவின் 6 அயல் நாடுகளும் முன்னரங்க நாடு Front-line States] இத்தடைகள் விதிக்கப்படவேண்டுமெனக்கோரிநிற்கின்றன. இவற்றில் மூன்றுநாடுகள் காமன்வெல்த் அமைப்பில் அங்கம்வகிக்கின்றன.

காமன்வெல்த் நாடுகளின் இந்தப் 'பொருளாதாரத் தடை விதிக்கும் கோரிக்கையை' திருமதி தாட்சர் நிராகரித்து வருகின்றுர். கடந்த வருடம் பஹாமாஸில் நடைபெற்ற காமன்வெல்த் நாட்டுத் தலைவர்களின் மாநாட்டின்போது தென்னுபிரிக்காவுக்கு எதிராகத் தடைகள் கொண்டுவரப்பட வேண்டுமென, பெரும்பான்மையான நாடுகள் விரும்பியபோதும் அவ் வேண்டுகோளை தாட்சர் நிராகரித்துவிட்டார். ஒருஜனநாயக அமைப்பில் பெரும்பான்மையினேர் விருப்பமே பெரும்பாலும் நிறைவேற்றப்படும் ஆயினும் காமன்வெல்த் அமைப்பின்தலைமைநாடு [எலிசபெத் மகாராணியார் பிரிட்டனே) என்றவகையிலும் இவ்வமைப்பில் சத்திவாய்நத, அபிவிருத்தியடைந்த மிக முக்கியமான நாடுகளிலொன்றுன பிரிட்டனை எதிர்த்து நிறைவேற்றப்படும் பிரேரணைகள் பயன்தராதுஎன்றவகையிலும் தென்னுபிரிக்காவிற்கு எதிராக உறுதியானதடைகள்கொண்டுவர ஏனையோரால் முடியவில்லை.

## இலங்கை என்ன செய்யும்?

அதன்பின்னர்கூட தென்னுபிரிக்காவுக்கெதிராக தடைகள் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கையை றீகனுடன் சேர்ந்து தாட்சரும் கடுமையாக எதிர்த்து வந்துள்ளார்,

திருமதி தாட்சரின் இந்தகொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே பிரிட்டனில் நடைபெறவுள்ள இந்தப்போட்டியைப் பகிஷ்கரிக்கப் போவதாக உகண்டா முதலில் அறிவித்தது, தொடர்ந்து பல நாடுகளும் உகண்டாவைப் பின்பற்றியுள்ளன, கென்யா, தன்ஸானியா, கானு, நைஜீரியா. மலேசியா, பப்புவா நியூ - கினி, பஹாமாஸ் பங்களாதேஷ், பொஸ்வானு, சியாராலியோன் ஆகிய நாடுகளே இவை.

## இந்திய நடவடிக்கை

ஆயினும் காமன்வெல்த் போட்டிகளின் அமைப்பாள

(4ம் பக்கம் பார்க்க)



சர்வதேச கீர்த்திபெற்ற பத்திரிகையாளர் கலாநிதி தார்ஸி வித்தாச்சி, கொழும்புப் பல்கலைக்கழகத்தினுல் இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பின்னர் தாயின் முத்தத்தில் திளைத்திருப்பதைப் படத்தில் காணலாம். அருகில் தந்தையர் திரு. எஸ். பிரிபரேராவும் காணப்படுகின்றுர்.

# முதல் ஏழு செல்வநாயகம் நினைவுப்பேருரைகள் 1978 - 1982

**புதிய புத்தகம்**

தமிழர் பெருந்தலைவரின் ஒன்பதாவது ஆண்டு நினைவு விழாவையொட்டி வெளியிடப்பட்ட நூலே இது. தமிழர் வரலாறு, ஏன் இலங்கை வரலாறு போன்ற நூலொன்று வருங்காலத்தில் எழுதப்படின் இந்நூல் அதற்கொரு வரப்பிரசாதம்.

தந்தை செல்வா அறங்காவற்குழுவின் தலைவர் திரு. கு நேசையா தமது முகவுரையில் குறிப்பிட்டதுபோல இலங்கை வாழ் தமிழர்கள் இன்றுபடும் இன்னல்களுக்கு, இந்த நாட்டின் பிரபல பத்திரிகைகள், வானொலி போன்ற தொலைத் தொடர்பு சாதனங்கள் இருட்டடிப்புச் செய்வதுடன் இனப்பகைக்கு உதவும் வகையில் பிரசாரம்செய்கின்றன. இவை அரசின் ஆதரவில் நடைபெறும் செயல்கள் என்பதுபெரிதும் வேதனைக்குரியது.

இந்தச் சூழ்நிலையில் மக்களுக்குத் தேற்றம் அளிக்கும் நோக்கத்துடனேயே இந்த நூல் வெளியிடப்படுகிறது. ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, தென்னிலங்கையில் வாழும் சிங்கள, முஸ்லிம் சமூகத்தவருக்கும் ஏன் நாட்டுக்கு வெளியேவதியும் எல்லா மக்களுக்கும், இப்பேருரைகளில் விளக்கப்பட்டிருக்கும் அரிய ஆராய்ச்சிக் கருத்துக்கள் பயன்படவேண்டுமென்பதும் திரு. நேசையாவின் நம்பிக்கை.

நான்கு பெரியோர்கள் தத்தமது துறையில் நிபுணர்கள் என்று கொள்ளப்படும் —திரு. ஆர். ஆர் திவாக்கர், வண. பிதா தனிநாயகம் அடிகள், பேராசிரியர் அ ஜெயரத்தினம் வில்சன் பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம்—முறையே நிழ்த்திய பேருரைகள் ஒன்றுகத் தொகுக்கப்பட்டு, பொருத்தமான முன்னுரைகளுடன், ஒரு அரிய நூலின் வடிவத்தில் காணப்படுகிறது.

காந்தி சமாதானதின் நிறுவனத்தின் தலைவரும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முதன்மைபெற்றவருமான ஆர். ஆர். திவாக்கர் தமது உரையில், சத்தியாக்கிரகம், அஹிம்சை என்ற கோட்பாடுகள நீண்ட இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கையாளப்பட்ட முறைகள மிக நுணுக்கமாக விளக்கியிருக்கிறுர். மகாத்மாவுடன அவர் கொண்டிருநத நெருஙகிய தொடர்பு அவருடைய பேருரைக்கு உயிர்த்துடிப்பாக அமைகிறது.


'தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்' என்ற ஆய்வுப் பேருரை நிகழ்த்த மிகத் தகுதியான பிதா தனிநாயகம் அடிகள் இதனை ஆங்கிலத்திலும் தமிழிலும் நிகழ்த்தியிருக்கிறுர். அவருடைய சடுதி மறைவுக்கு சில மாதங்களுக்கு முன்னரே இக்கைங்கரியம் நிறைவேற்றப்பட்டது தெய்வாதீனமென்றுகொள்ளலாம்.

'.வரலாறு வாழ்க்கையின் ஆசிரியர், ஐரிஷ் மக்கள் நானூறு ஆண்டுகளாகவும், வெல்ஷ் மக்கள் நானூறு ஆண்டுகளாகவும் போராடி தம் மொழிக்கும் பண்பாட்டிற்கும் இயக்கங்களை வளர்த்து சில றைகளில் விடுதலையடைந்துள்ளனர்.'' இன்னும் பல நாடுகளை உதாரணம் காட்டி. ' நம் தந்தை செல்வா காட்டிய அஹிம்சைவழியில் நாம் செயற்பட்டால் வெற்றி

(4ம் பக்கம் பார்க்க)

வெளியீடு:
தந்தை செல்வா
அறங்காவல் குழு,
யாழ்ப்பாணம்.
விலை ரூபா 50/-

இன்ரநாஷனல்
கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்
International Communication Complex.




282 A, யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

உள்நாட்டு-வெளிநாட்டு
தொலைபேசி (Telephone)
தொலைத்தொடர்பு (Telex)

பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே நிம்மதியாக, நேரடியாக உலகின் எப்பகுதிக்கும் தொடர்புகொள்ள—

இரவு-பகல் 24 மணி நேரமும், வாரம் பூராவும் தொடர்ச்சியான சேவையைப் பெற தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே ஒரு நவீன

தகவல் தொடர்பு நிலையம்!

(A777)

# பொன்னான ஒரு முழு நாள் பொழுது

— நெல்லை. க. பேரன்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் இதுவரை இல்லாத புதுமை நிகழ்ச்சியாக யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையில் எழுத்தாளர் 'சுதாராஜ்' நிர்மாணித்துள்ள 'கவிதை' என்ற அழகான சூழலில் அமைந்துள்ள இல்லத்தில் யாழ். குடாநாட்டின் பல்வேறு பாகங்களையும் சேர்ந்த எழுத்தாளர்கள் ஒன்றுகூடிப் பாட்டும் கூத்துமாக ஒருநாள் முழுவதையும் களித்தனர். ஆம! இலக்கியம் என்பதையே மறந்து இலக்கியம் பேசாத நாளாக இத்தநாளைக் கொண்டாட வேண்டும்என்ற கொள்கையின் அடிப்படையில் மல்லிகை ஆசிரியர் திரு டொமினிக் ஜீவாவின் அழைப்பின் பேரில் இந்த எழுதாளர்கள் ஒன்றுகூடல் வைபவம் 6-7-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணி வரையும் நடைபெற்றது.

எழுத்தாளர்கள் வெறும் இலக்கிய சர்ச்சைகளில் மாத்திரம் ஈடுபட்டுக் கொண்டிருக்காமல் ஒருவரை ஒருவர் நேச மனப்பான்மையுடன் புரிந்துகொள்ளவேண்டும் என்ற உணர்வுடன் இந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது என்றும் இளமைக்கால நினைவுகளை நாம் இரைமீட்பதற்கு இதுஓர் அரியசந்தர்பமாகும் என்றும் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்த டொமினிக்ஜீவா தெரிவித்தார்.

புதுவை இரத்தினதுரை அவசரம் அவசரமாகத் துண்டுகளில் சிலகோரிக்கைகளை எழுதிச் சுருட்டிச் சுருட்டி வைத்தார். ஜீவா அத்துண்டுகளை வெள்ளிததட்டில் ஏற்றி வட்டமாக அமர்ந்திருந்த இலக்கியகாரர்கள் மத்தியில் வலம் வந்தார் எல்லோரும்துண்டுகளை எடுத்தபின்னர் அதில் கேட்டுள்ள விடயங்களைமறுக்காமல் செய்து காண்பிக்க வேண்டும் என்பதேஏற்பாடு. யாராக இருந்தாலும் நேர்மையாக இக்கட்டளைக்குக் கட்டுப்படவேண்டும்.

எல்லாருக்கும் முதலாக இலக்கியம் பேசிய குற்றத்துற்காக இரண்டுதடவைகள் ஒவ்வொருரூபா குற்றப்பணத்தை ஈழமுரசு ஆசிரியர் எஸ். திருச்செல்வம் விதித்தார். தெண்டம் புதுவையிடம் கொடுக்கப்பட்டது. இனி நகைச்சுவை நிகழ்ச்சிக்கு வருவோம்.

நிகழ்ச்சியை ஆரம்பித்த டொமினிக்ஜீவாவிடம் கேட்கப்பட்டவாறு "செகஸ் ஜோக்ஸ்' சொன்னார். சர்ச்சில் பிரபுவின் பகிடி என்று சொல்லி எல்லோரையும் சிரிக்கவைத்தார். பிரபல நாடகக் கலைஞர் ஏ ரி. பொன்னுத்துரை சினிமாப் பாட்டுபபாடினார். நாவலர் சபைச் செயலாளர் நா. சோமகாந்தன் கொழும்பில் பஸ் பிரயாணத்தின் போது தமக்கு ஏற்பட்ட உரசல் அனுபம் ஒன்றைச் சுவைபடச் சொன்னார். கவிஞர் முருகையன் சினிமாப்பாட்டு பாட வேண்டும். யோசித்தார். ஞானக்குழந்தை சினிமாவில் வந்த தோடுடைய செவியன் என்ற தேவாரத்தைப் படித்துத் தம்நேர்மையைக் காப்பாற்றினார். கலாநிதி சி. மௌனகுரு 'வாராய் நீ வாராய் என்றபாட்டைசிதம்பரம் ஜெயராமனைப்போன்று இழுத்துப் பாடினார். பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதர்சிங் பாவம், தேவாரம் படிக்கச் சொல்லி இருந்தது. முகத்தைச் சுழிக்காமல் 'பித்தா பிறை சூடி' என்று பாடிவைததார். பேராசிரியர் அ. சண்முகதாஸ் கிராமிய மெட்டில் உள்ள சினிமாப்பாட்டுஒன்றை பாடினார்.

பேராசிரியர் நந்தியிடம் தமக்கு விருப்பமானதைச் செய்யும்படி கேட்டிருந்தார். மெதுவாக எழுந்து நடந்து மேசையில் வைக்கப்பட்டிருந்த போத்தலில் இருந்து ஒரு கிளாசில் வார்த்துக் குடித்தவாறே டொமினிக்ஜீவாவுடன் நின்று ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டார். வீரகேசரி பிரதம ஆசிரியர்ஆ. சிவநேசச்செல்வன் இருந்து இருந்து எழும்பினார். இ. சிவானந்தன் இளமைக்காலம் காதல் நினைவுகளைச்சொன்னார் இரா. சிவசந்திரன் 'மறக்கமுடியாத அனுபவங்கள்' என்று கேட்ட போது தமது காதல் அனுபவங்களைச் சொன்னார். தெணியானிடம் 'இப்போது என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்கப்பட்டபோது 'சோமகாந்தன் பஸ்சில் இருந்த இடத்தில் நான் இருந்திருந்தால்...' என்று நினைபபதாகச் சொன்னார். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர். ஈழமுரசு ஆசிரியர் எவ். திருச்செல்வம் செக்ஸ்ஜோச்ஸ் ஒன்றைச் சொல்லிக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்தார். கே. ஆர். டேவிட் 'மனிதன் இருக்கின்றான .' என்றபாட்டைப்படித்தார். நெல்லை க. பேரன் தமது கல்லூரிக்கால நினைவுகளைப் பறறிச் சொல்கையில் சங்கீதவித்துவான் ஏ. கே. கருணாகரனுடன் சேர்ந்து பாடிய 'பழந்தமிழ்வீரன்...' என்ற பாட்டைச் சுர வரிசையுடன் பாடினார். செ. யோகராசா (கருணையோகன்) பெரியபுளுகு ஒன்றை அவிழ்த்துவிட்டார் எஸ். வன்னியகுலம் தமது காதலியை நினைத்து ஒரு பாடல் பாடினார். குப்பிளான் ஐ சண்முகன் ஓதுவார் பாணியில் 'வேயுறுதோளிபங்கன் ' என்ற தேவாரந்த்தைப்படித்தார். த. கலாமணி இருபத்தைந்துவயதில் தாம் எப்படி இருந்திருப்பேன் என்பதை நினைவுகூர்ந்து 'பக்தநந்தனார்...' பாடலொன்றைப் பாடிக்காண்பித்தார். இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தமிழ் அரசியல் வாதிமாதிரிப் பேசிக்காட்டினார். புதுவை இரத்தினதுரை தமது இளமைக்காலக் காதல்நினைவுகளைச் சொல்லி அனைவரையும் சிரிக்கவைத்தார். கலாநிதி சோ. கிருஷ்ணராசா நிகழ்ச்சிகளுக்குச் சற்றேபிந்தி வந்தாலும தமது இளமைக் கால காதல் நினைவுகளை மிகவும் சுவாரஸ்யமாக நினைவுகூர்ந்தார்.

காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை சுதாராஜின் 'கவிதை' இல்லம் கலகலவென்று பாட்டும், கூத்துமாக ஒலித்தது. சபையின் விருப்படி கலாநிதி மௌனகுரு கூத்து ஒன்றை ஆடிக்காட்ட ஏ. ரி. பொன்னுத்துரை தாளக்காவடி ஆடிக்காட்டினார். பேராசிரியர் சண்முகதாஸ் கூத்துப் பாட்டு ஒன்றைப் பாடினார்.

மறுபடியும் செப்டம்பரில் உரும்பராயில் இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி நடைபெறும என்று மல்லிகைஜீவா அறிவித்தார். இறுதியாக சுதாராஜ் குடும்பதினருக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

சுதாராஜின் தம்பியும் பிரபல ஓவியரும், கட்டிடக்கலை நிபுணருமான திரு. எஸ் கே குணசிங்கம் தமையனுடன் உபசரிப்பிலும் படம் எடுப்பதிலும் உதவியாக நின்றார். இவரது நவீன ஓவியமொன்றும் 'கவிதை' இல்லத்தின் கூட்டத்துச் சுவரை அலங்கரிப்பதைக் காணலாம். யாழ் நகரின் பிரபல ஹோட்டலில் இருந்து தருவிக்கப்பட்ட புறியாணிச் சாப்பாடுஎல்லோருக்கும் பரிமாறப்பட்டது. சிற்றூண்டி...குளிர் பானம்... பீடா...என்று அடிக்கடி ஒரே உபசரிப்புக்கள்.

## செல்வநாயகம் . . .

[3ம் பக்கத் தொடர்ச்சி]
காண்போமென்பது திண்ணம்'' என்று உரையை முடித்திருக்கிறார்.

நம் அவ்சரப்பட்டு இன்றைய நிலைமை இதற்கு முரணானதென்ற முடிவுக்கு வருவது மடமை.

'ஆதர்ஸத் தலைவன்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் பேராசிரியர் அ ஜெயரத்தினம் வில்சன் நிகழ்த்திய பேருரை சிக்கல் நிறைந்த கருத்துக்களை கொண்டிருந்ததால் அது தமிழில் மிகச் சாமர்த்தியமாக மொழிபெயர்த்து நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில அறிவு ஆழமில்லாதவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

மாமனை மருகன் புகழ்ந்துரைக்கிறார் என்ற வழுவுக்கு இடமளிக்காத வகையில் அரசியல் ஆராய்ச்சிநிபுணர் உலக வரலாற்றில் பல சம்பவங்களையும், தலைவர்களையும் பீடிகையாகக்கொண்டு ஈழத் தமிழ் இனத்தின் தனித்துவத்தை, நிலைநாட்டிய வீரத் தலைவர் என்றும், "தமிழ் பேசும்மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாகச் சிந்திக்க வைத்த'' சாதனை வேறெவரும் சாதிக்கமுடியவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வடக்கிலங்கைத் தமிழரின் பொருளாதாரம் அதன் வரலாற்று அத்திபாரம் என்ற பொருள்பற்றிப் பேசிய பேராசிரியர் அரசரத்தினம் எந்த ஒரு கூற்றுக்கும் மேற்கோளோ அடிக்குப்போ காட்டத்தவறவில்லை. 39 பிற குறிப்புக்களை நோக்குவோர் பலர் என்றும் கேள்விப்படாத அரிய நூல்கள் மிகநுணுக்கமாக ஆராயப்பட்ட அற்புதத்தை வாசகர்கள் அவதானிக்கத் தவறமாட்டார்.

உரியகாலத்தில் உரியநூல் வெளியிடப்படுவதற்கு இப் பேருரைகள் உதவியிருப்பதும் பெரும்பாலும் தந்தை செல்வநாயகத்தின் பெருமை; நினைவுப் பேருரைமரபுக்கு முரண்பட்டவகையில் இடம்பெற்றிருந்த போதும்; இன்றைய அரசியல் பொருளாதார, சமுதாய நெருக்கடிகள், இந்த வழுவுக்குத் தவிர்க்க முடியாத காரணமெனலாம்.

அரும்பெரும் ஆராய்ச்சிக் கருத்துக்கள் பொதிந்திருக்கும் இந்நூல் இன்றுகாணப்படும் போர் நெருக்கடிக்கும் விளக்கமளிக்கவல்லவை. ஆழ்ந்த சிந்தனை அதற்குத் தேவை.

ந. ச.விசுவநாதன்.

# இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்: ஆடி
திகதி: 4 (1986-07-20)
கிழமை: ஞாயிறு
திதி: சதுர்த்தசி
மு.இ வரை
நக்ஷத்திரம்: பூராடம்
பி.இ.வரை

### மேடம்

சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காண முடியும். குடும்பத்தில் பிணைப்புகள் இறுகும். மாணவர்களுக்கு அவதானம் வேண்டும். பெண்களுச்கு அவப்பெயருக்கும் இடமுண்டு. இறை வழிபாடு சிறப்பைத் தரும்.

### இடபம்

கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவங்கள் இடம் பெறலாம். பெரியவருடன் பகைத்துக் கொள்ள நேரிடும். எதிலும் முன்யோசனை வேண்டும். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும். போக்குவரத்திலும் கவனம் வேண்டும்.

### மிதுனம்

பசுமையான சம்பவங்கள் நடைபெறும். களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். தூரத்து உறவினர் ஒருவரின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

### கடகம்

நம்பிக்கை மோசடி நடக்கும். நண்பர்களும் காலை வாரி விடக் கூடும். எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். கூட்டு வியாபாரத்தால் மோசடிகள் நடக்கலாம் எதிலும் எச்சரிக்கை வேண்டும்.

### சிங்கம்

பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. நீண்ட நாள் மனக்குறை நிவர்த்தியாகும். பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொது மக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

### கன்னி

வெற்றிப் பாதையில் வீறு நடை போடுவீர்கள். தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். திடீரென வரும் வருவாயால் கடன் தொல்லை தீரும். பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும். மாணவர் சிந்தித்துச் செயற்படவும்.

(11ம் பக்கம் பார்க்க)

## காமன்வெல்த் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
ரையும் பிரிட்டிஷ் அரசையும் அதிர்ச்சியடைய வைத்திருப்பது, தனது குழுவின் எடின்பரோ விஜயத்தைப் பின்போட்டுள்ள இந்திய அரசின் நடவடிக்கையே. பங்கு பற்றும் நாடுகளின் அதிகளவு வீரர்களை (126 வீரர்களை) கொண்டுள்ள இந்திய குழு போட்டிகளில் பங்பற்றுவிடின் அது நிச்சயமாக போட்டியின்...

......பாதிக்கும் அத்துடன் இன்று வளர்முக நாடுகளில் இந்தியாவுக்கு பெருமதிப்பு உண்டு. இந் நிலையில் இந்தியா தனது குழுவின் விஜயத்தை ரத்துச்செய்தால் இந்தியாவையேஇன்னும் பலநாடுகளும் பின்பற்றும் குறிப்பாக இந்த போட்டிகளில் கலந்து கொள்ளாதவர்களுக்காக இந்தியா, தனது நாட்டில் இன்னொரு காமன்வெல்த் போட்டியை நடத்த ஆலோசித்து வருகிறது.

விளையாட்டுத் துறையில் அரசியலைப்புகுத்துவது நியாயமில்லைதான். ஆனல் அரசியலைப் பொறுத்தவரையில் நியாய, அநியாயங்கள் பார்க்கப்படுவதில்லை.

தென்னபிரிக்காவின் சிறுபான்மை வெள்ளையர் அரசு, மிகக் கேவலமான முறையில் அந்நாட்டு பெரும்பான்மை மக்களை நடத்தி வருகிறது. இதனை சகல நாடுகளும் கண்டித்து வருகின்றன. பல நாடுகள் தென்னபிரிக்காவுடனான தமது உறவுகளை முறித்துக் கொண்டுள்ளன.

இந் நிலையில், தனது வர்த்தக நலன்களை மாத்திரம் முன்னிட்டு அமெரிக்காவும் பிரிட்டனும் தென்னபிரிக்காவுக்கெதிராக தீவிர நடவடிக்கைகளை எடுக்கத் தயங்குகின்றன. 'சர்வதேச பயங்கரவாதத்துக்கெதிராக உலக நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்' என குரலெழுப்பும் றீகனும், தாட்சரும் தென்னபிரிக்காவுக்கெதிராக 'உரிய நடவடிக்கை' களை எடுக்கத் தயங்குவது கண்டிக்கத்தக்கது. (தென்னபிரிக்க இனவாத அரசின் செயல்களும் 'அரச பயங்கரவாதம்' என்றே கூற வேண்டும்.)

எது எவ்வாறு இருப்பினும், மனது நாட்டு (கறுப்பின) மக்களைப் பாதிக்குப் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வெள்ளையரசு, இன்று காமன் வெல்த் அமைப்பு நாட்டு மக்கள்- சர்வதேச ரீதியில் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாத நிலையிலுள்ள மக்கள் இப்போட்டிகளிலேனும் தமது திறமையைக்காட்ட, தனது இனவாதக் கொள்கைகள் மூலம் தடையாகின்றது

ஒன்றில் தென்னபிரிக்க அரசு, தானகவே தனது இனவாதக் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும்; அன்றில் உலக நாடுகள் தென்னபிரிக்க அரசைச் சகல வழிகளிலும் தனிமைப்படுத்தி, அதனமூலம் அவ்வரசைப் பணிய வைக்கவேண்டும். இன்றைய நிகழ்வுகளைப் பார்க்கையில பின்னது நடவாமல் முன்னது நடக்காது போன்றே தோன்றுகிறது. எனவே அதனை நடைமுறைப்படுத்த சகல நாடுகளும் முன்வர வேண்டும். அதுவரை இது போன்ற பகிஷ்கரிப்புகளும் நடைபெறும்; இது போனற [காமன் வெல்த்] அமைப்புகளில் கருத்து மோதல்கள், முறிவுகள் இடம்பெறும், எல்லாவற்றிற்கும் மேலாக தென்னபிரிகக் கறுப்பின மக்கள் மனிதரைவிட கீழ்த்தரமாக நடத்தப்படுவதும் நீடிக்கும்.

### இலங்கையின் பங்கு

காமன் வெல்த் அமைப்பின் உறுப்பினரான இலங்கை, இப் போட்டிகளில தனது நிலை பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை ஆயினும் பெரும்பாலும் பங்கு பறறும் என்றே நினைக்க வேண்டியுள்ளது ஏனெனில் இன்று பல 'துறைகளில்' தென்னபிரிக்கா இலங்கைக்கு உதவி வருகிறது. அத்துடன் பிரிட்டனும் அமெரிக்காவும் இலங்கையை போட்டிகளில் பங்குபற்றவே ஊக்குவிக்கும்.

ஆயினும் இவற்றை மீறி இலங்கை இப்போட்டிகளைப் பகிஷ்கரிக்க முடிவெடுத்தால், அது தென்னபிரிக்க கறுப்பின மக்களுக்கும், இனவாதத்தை எதிர்க்கும் நாடுகளுக்கும் செலுத்தும் மரியாதையாகவே அமையும்.

## நாளை குருபூர்ணிமா தினம்

# குரு ஆன்ம விடுதலையின் கதவு!

● சுவாமி சிவானந்தா
தமிழில்: இரா. மகேந்திரசிங்கம்

இறைவனே மனிதவடிவில் குருவாக வருகின்றார். இறைவனின் திருவருள் குருவடிவில் எமக்குக் கிட்டுகின்றது. குருவைக் காண்பது, கடவுளைக் காண்பதற்கு ஒப்பானதாகும். குரு இறைவனுடன் ஐக்கியமாகியுள்ளார். ஆதலினால் குருவின் தரிசனம் எம்மையெல்லாம் புனிதப்படுத்தும் தன்மையது.

புத்தகங்களை மட்டும் படிப்பதினால் ஒருவர் குருவாகிவிட முடியாது. வேதங்கள் எல்லாவற்றையும் ஐயம்திரிபறக் கற்றுப் பிரம்மஞான அறிவுடன் கூடிய அனுபவங்களே ஒருவரைக் குருவாக்குகின்றது. உலகபந்தங்களில் இருந்து முற்றாக விடுதலையடைந்த முனிவர்கள், சாதுக்கள் என்போரே உண்மையான குருவாவார்கள். இவர்களுக்கு மட்டுமே பரப்பிரமத்தைப் பற்றிய பூரண அனுபவரீதியான அறிவு இருக்கும். உண்மையான குருவிடம் எண்ணிறந்த சித்துக்களும் சக்திகளும் சேர்ந்து இருக்கும்.

ஆனால் சித்துக்களைக் கொண்டிருப்பதனால் மட்டும் ஒருவர் தன்னைத்தான் அறிந்துகொண்டார் என்று கருதுவதற்கிடமில்லை. உண்மையான குரு சித்துக்கள், அற்புதங்களைச் செய்துகாட்ட விரும்பமாட்டார். ஆனால் சில வேளைகளில் சித்துக்களைச் செய்து காட்டுவதன் மூலம் மானிடர்களைத் தம்பால் இழுக்கின்றார்.

உண்மையான குரு அவரைப் பொறுத்த மட்டில் பிரம்மத்தை உணர்ந்தவராகக் காட்சியளிப்பார். அவரிடம் கடலளவு அன்பும், அறிவும் கருணையும் நிறைந்திருக்கும். ஆத்மாக்களின் தலைவனாகவும், ஆனந்தத்தின் உறைவிடமாகவும் காணப்படுவார். மானிடனுக்குரியபிரச்னைகள், துன்பங்கள் தடைகளைக் கணப்பொழுதில் அவரால் நீக்கிவிடமுடியும். இறைவனை அடைவதற்குரிய சரியான மார்க்கங்களைக் காட்டி மூடக்கொள்கைகளைக் கிழித்தெறியும் ஆற்றல் குருவுக்கே உண்டு. அவர் மானிடர்களை இறைவனுக்குகின்றார். அறிவைத் தந்து பிறப்பு, இறப்பு என்ற கடலில் ஆழ்ந்து விடாது காப்பாற்றுகின்றார், எனவே, குருவை மனிதனாகக் கருதாது, அதிவணக்கத்துக்குரியவராகக் கருதுதல் அவசியம். குருவே கடவுள், குருவினால் கூறப்பட்ட வாக்கியங்கள் இறைவனால் கூறப்பட்ட வாக்கியங்களாகக் கருதப்படல் வேண்டும்,

மனிதன் மனிதனிடமிருந்தே கற்கிறான். ஆதலினால் இறைவனும் மனிதவடிவினூடாகவே குருத்தொழிலைச் செய்கின்றார். ஆன்மவிடுதலையின் கதவாக குரு கருதப்படுகின்றார். ஆதலினால் குருவின் உதவியுடன் ஆத்மீகச் சாதனைகளைப் பயிலுதல் முக்கியமானதாகும். மெழுகுதிரி ஒன்றைக் கொளுத்துவதற்கு எப்படி இன்னுமொரு எரிகின்ற மெழுகுதிரி அவசியமோ அதைப்போன்றே ஆத்மாவின் பிரகாசத்துக்குப் பிரகாசமடைந்த ஆத்மாவின் உதவி தேவைப்படுகிறது.

மனமானது பிழையான வழிக்கே புலன்களை இழுத்துச் செல்லப் பார்க்கும். படுகுழிக்குள் விழாமலும், தடைகளில் இருந்து காத்தும் சிறந்த வழிக்கு எடுத்துச் செல்லக் கூடிய ஆற்றல் குருவுக்கே உண்டு.

வேதாந்தங்கள் அடர்ந்த காடு போன்றவை, அங்கு எத்தனையோ தெளிவற்ற வாக்கியங்கள் இருப்பதைக் காணலாம். விளக்கங்கள் ஒளிந்திருப்பதும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைச் சொல்வது போன்றும் தென்படும். வேதாந்தக் கருத்துக்களுக்குச் சரியான விளக்கமளித்துத் தெளிவற்ற தன்மையைப் போக்கக்கூடிய ஆற்றல் குருவுக்கே உண்டு.

எங்களிடம் உள்ள குறைகளைக் குரு ஒருவரினால் மட்டுமே கண்டு கொள்ளமுடியும். ஆணவத்தின் தன்மை, ஒருவன் தான்விடும் பிழைகளைக் கூட அறியவிடாது தடுத்துவிடும். ஒருவன் எப்படித்தன் முதுகுப்புறத்தைக் காணமுடியாதோ அவ்வாறே தான் விடும் பிழைகளையும் இலகுவில் கண்டுகொள்ளமாட்டான். இவன் குருவின்கீழ் இருக்கும் பொழுது மட்டுமே அவனிடம் உள்ள கெட்ட குணங்கள் மறைந்தோடி விடுகின்றன. பிழைகள் திருத்தப்படுகின்றன.

எல்லாப் பெரிய மகான்களுக்கும் குருவின் கடாட்சம் தேவைப்பட்டதைக் காணக் கூடியதாக உள்ளது. சாதுக்கள், சந்நியாசிகள், அவதார புருடர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருப்பினும் அவர்கள் குருவிடமிருந்தே ஆத்மீகச் சாதனைகளைப் பயின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. மைத்ரேயி ஞானவால்கியிடமிருந்தும், பிருகு வருணனிடமிருந்தும் நாரதர் சனத்குமாரரிடமிருந்தும், இந்திரன் பிரஜபதியிடமிருந்தும் ஞானத்தைப் பெற்றார்கள். மேலும் எத்தனையோ துறவிகள் கடுமையான பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்தும் கடுமையான ஒழுங்குகளைக் கடைப்பிடித்தும் குருவிடமிருந்து பிரம்ம ஞான அறிவைப் பெற்றுள்ளார்கள். கிருஷ்ண பரமாத்மா காண்டீபனிடமிருந்தும், ஸ்ரீராமன் சிஷ்ட மகரிஷியிடமிருந்தும் ஆத்மீக ஆலோசனைகளைப் பெற்றார்கள். இயேசுக்கிறிஸ்து நாதர் ஜோர்தான் நதிக்கரை ஜோனிடமிருந்து தீட்சை பெற்றார்.

எவர் ஒருவரைக் கண்ட மாத்திரத்தில் மனஅமைதி பிறக்கின்றதோ எவரின் வார்த்தைகளில் காந்தம் போன்று கவர்ந்து இழுக்கப் படுகின்றேமோ எவரினால் எமது சந்தேகங்கள் தீர்க்க முடிகின்றதோ· எவர் சிற்றின்பம், பேராசை, கோபம் முதலானவற்றில் இருந்து விடுபட்டுச் சுயநலவாதியாக இல்லாமல் இருக்கின்றாரோ, எவர் ஆணவமற்ற அன்பான வடிவமாய்க் காட்சியளிக்கின்றாரோ அவரே குருவானவர்.

.. எத்தனையோ தருணங்களில் இறைவன் தன் பக்தர்களுக்கு உதவி புரிந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. ஏகநாத் அசரீரி வாயிலாகத் தன் குருவைக் கண்டுபிடித்தார். துர்க்காராம் கனவில் ராம்-கிருஷ்ண ஹரி என்ற அவருக்குரிய மந்திர தீட்சை பெற்றார். இம்மந்திரத்தை அவர் உச்சரிக்கும்பொழுது கிருஷ்ண பரமாத்மாவின் தரிசனம் அவருக்குக் கிடைத்தது. மதுரகவி நிலையான ஒளியை மூன்றுநாட்கள் தொடர்ச்சியாகக் கண்டார். இவ்வொளி தின்னவேலியில் புளியமரத்தடியில் சமாதி நிலையில் இருந்த நம்மாழ்வாரைக் கண்டுபிடிக்க உதவியது.

பரிபக்குவம் அடைந்த ஆத்மாக்கள் எத்தனையோ பேர் எம்மைச் சுற்றி இருக்கின்றார்கள். ஆனால் அறிவிலிகளான மக்களால் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிவதில்லை. சிறந்த நற்குணங்கள் கொண்ட ஒரு சிலரால் மட்டுமே, அவர்களை அறியமுடிகின்றது. ஆத்மீக முன்னேற்றம் வேண்டி அலையும் ஆத்மாக்களுக்கு வேதபுராணங்களும் குருவும் உதவி புரிகின்றார்கள். பரிபக்குவம் அடைந்த ஆத்மாக்கள் சத்ய யுகத்தைக்காட்டிலும், இவ்யுகத்தில் குறைவாக இருப்பினும் ஆத்மீக முன்னேற்றத்திற்காகவே அவர்கள் இருந்து வருகின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் தன்னால் விளங்கக்கூடிய அளவிற்கும் உணர்ச்சிகளுக்கு மேற்ப விரும்பிய பாதையைக் கடைப்பிடிக்கலாம். அவனுக்குத் தேவையான குரு அவன் செல்லும் பாதையில் அவனைச் சந்திப்பார்.

மனிதனாகப் பிறந்த ஒருவனுக்கு இவ் உலகில் இரு கடமைகள் உள்ளன. ஒன்று தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல். மற்றது தன்னைத்தான் அறிதல். வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டுமானால் தான் உண்ணும் உணவிற்காக வேலை செய்யக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். தன்னைத்தான் அறிவதற்கு எல்லோரிடமும் அன்பு செலுத்தித் தியானம், சேவை என்பவற்றைச் செய்யவேண்டும். எவர் ஒருவர் அவர் பரிபக்குவம் அடையும் வழிகளையும் மார்க்கங்களையும் காட்டிக் கொடுக்கின்றாரோ அவரே தீக்ஸ குருவாவார். தீக்ஸ குருவே இறை உணர்வை ஏற்படுத்தி மோட்ச நிலைக்கு எடுத்துச்செல்லக்கூடியவர்.

நீரைத்தேடிப் பல இடங்களில் தோண்டுவதைக் காட்டிலும் ஓரிடத்தில் ஆழமாகக் கிண்டுவதன் மூலம் நல்ல நீரைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதேபோன்று ஆத்மீகப் பாடல்களையும் ஒருவரிடமிருந்து அறிய முற்படுவதே சிறந்தது. பலரைத் தேடிச் சென்று சிறிதுகாலத்தில் அவர்களிடம் நம்பிக்கை இழப்பது போன்ற செயல்கள் ஆத்மீகத் துறைக்கு உதவாது· அடிக்கடி மாறும் மனஇயல்புடைய தாசியைப் போன்றிராது ஒரு ஆத்மீகக் குருவிடம் சிறிது வருடங்கள் இருந்து ஆத்மீகப் போதனைகளைக் கற்பது மேலானது.

பல குரு ஒருவனுக்கு இருப்பார்களாகில் அவன் எதைச் செய்யவேண்டும் என்ற மன நிலையையே இழந்துவிடுவான். ஒரு குரு அதைச் செய் என்பார். மற்றவர் இதைச் செய் என்பார். இதனால் மன நிலையே கலக்கமுற்றுவிடும். ஆதலினால் ஒரு குருவையே முற்றாக நம்பிச் சரணடைந்து அவரின் ஆணைகளை ஏற்றுக் கொள்ளுதல்வேண்டும். ஏனைய குருமார்கள் கூறும் உபதேசங்களை மதித்து நடப்பதில் பாதகமில்லை. ஆனால் ஒரு குருவின் வழியையே பின்தொடரல் வேண்டும் அப்பொழுதேவிரைவான ஆத்மீக முன்னேற்றம் ஏற்படும். சிஷ்யனுக்கு வேண்

(8 ம் பக்கம் பார்க்க)

## தீயாய் ஏனோ எரிக்கின்றாய்

நிழலெனக் கண்ணில் நீவிழுந்து
நிலவென நெஞ்சினில் நீ குளித்தாய்
உயிரென உன்னை அழைக்கையிலே
உறவென என்னை நீ யணைத்தாய்
விழியினுள் செய்த விந்தையெலாம்
விதியா சதியா என்னுயிரே
வீணாய்ப் போனது வாழ்க்கையிது
வினையாய் முடிந்தது காதலது
நீராய் நெஞ்சினிற் குளிர்ந்தவளே
தீயாய் ஏனோ எரிக்கின்றாய்
பூவாய் மலர்ந்த இதழிரண்டைப்
புதிராய் மாற்றி வதைக்கின்றாய்
வார்த்தைகள் மாறுதல் சகஜம்—பிறர்
வாழ்வை மாற்றுதல் பாவம்
வாய்க்காலானது இதயம்—அது
வடித்திடும் என்றும் உதிரம்.

—பிரபா

● மீண்டும் ஜூலை:

# மறக்க முடியாத மரணங்களும் மாறாத ரணங்களும்!

கடந்த 6-7-86 'ஈழநாடு' ஞாயிறு பதிப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையில் விடுபட்டுப்போன சில வரலாற்று நிகழ்வுகள் மறக்கவொண்ணாதவை!

தற்பொழுது எங்ஙனம் இனப்பிரச்சினைக்கு ஏற்புடைத்தான நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை நாடாமல் ஒன்பது மாகாணங்களுக்கு இடையே அதிகாரங்களைக் கையளிப்பதா அல்லது பரவலாக்குவதா என்பது குறித்துச் சர்வகட்சி மாநாடுகள் 'சுற்றுப் பேச்சுக்களை' நடத்திவருவது போன்றே அப்போதும் 24 மாவட்டங்கள் மத்தியில் அதிகாரங்களைப் பரவலாக்குதல் குறித்துச்சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாகவிருந்தகட்டம்!

அங்ஙனம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாகப் பிரசவிக்கப்பட்ட குறைப் பிரசவங்கள்தாம் மாவட்ட அபிவிருத்திச் சபைகள்.

அரசியல் வட்டாரங்கள் சம்பந்தப்பட்ட சுற்றுப் பேச்சுக்

### 'திரவியம்'

களுக்கான முன்னறிவிப்பை எதிர்நோக்கி இருந்த வேளையில்தான் யாழ்ப்பாண மாவட்டத்தில் மின்னாமல் முழங்காமல் இடி விழுந்தது.

1979ம் ஆண்டு ஜூலை 12ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

''இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் பயங்கரவாதத்தை 1979 டிசம்பர் 31ம் நாளுக்கு முன்பாக அதன் சகல வடிவங்களிலும் அழித்தொழிக்கும்படி'' படைத் தளபதி ஒருவருக்கு ஜனாதிபதியினால் ஆணை வழங்கப்பட்டு அவர் வடக்கே அனுப்பப்பட்டார்.

மதவாச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா அந்த ஆணையை யூதர் பிரச்சினைக்கு ஓர் இறுதித்தீர்வு காணும்படி தனது தளகர்த்தர் ஒருவருக்கு நாஜித் தலைவர் ஹிட்லரால் இடப்பட்ட ஆணையுடன் ஒப்பிட்டு அறிக்கை வெளியிட்டிருந்தார். திரு மைத்திரிபால சேனநாயக்காவின் கூற்று பாராளுமன்றத்திலேயே பலத்த வாதப்பிரதிவாதங்களுக்கு களமமைத்துக்கொடுத்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட 24 மணி நேரத்துக்குள், அதாவது 1979 ஜூலை 13ம் திசதி இரவுக்கும் 14ம் திகதி அதிகாலைக்கும் முன்பாக ஆயுதம் தாங்கிய சிவில்உடை தரித்தோரால் குடாநாட்டின் பல பகுதிகளில் அமுலில் இருந்தும் தமிழ் இளைஞர்கள் பலர் இரவோடு இரவாக கைது செய்யப்பட்டுக் கடத்தப்பட்டனர்.

எங்கோ ஒரு புறநகரில் நடைபெற்ற கொடூர சித்திரவதைகளின் பின் நவாலியில் கைதுசெய்யப்பட்ட இன்பம், அவரது மைத்துனர் செல்வம் இருவரது சடலங்களும் அல்லைப்பிட்டி அருகே பண்ணைப் பாலத்தருகே வீசப்பட்டிருந்தன. இவ்விருவரையும் அடையாளம் காண்பதில்கூடமுதலில் ஒரு மயக்கநிலை.

> "சம்பந்தப்பட்ட கொலைஞர்களை நீதி விசாரணைக்கு இன்றில்லாவிடினும் என்றோ ஒருநாள் நிறுத்தியே தீருவதென்று இந்நாளில் உறுதி எடுப்போம்....."

சம்பந்தப்பட்ட கொலைகள் சம்பவித்த காலத்தில் தமிழ்ப் போராளிகளிடம் நவீன ஆயுதங்கள் இருந்திருக்கவில்லை. அல்லது அத்தகைய ஆயுதங்களைப் பிரயோகிப்பதை அவர்கள் தவிர்த்து வந்திருந்தமையாக இருந்திருக்கலாம். அக்காலகட்டத்தில் போராளிகளால் உபயோகிக்கப்பட்டவை வெறும் கைத்துப்பாக்கிகளும் நாட்டுக் கைக்குண்டுகளும்தான். பழி ஓரிடம் இருக்

(8ம் பக்கம் பார்க்க)

# அறுவைச் சிகிச்சை ஆயுள்வேதத்திற்குப் புதிதா?

'நவீன அறுவைச் சிகிச்சை முறைகளுக்கான மூல உத்தியை அளித்தது ஆயுள்வேத வித்தகர் சுஸ்ருதரின் வைத்திய சாஸ்திரமே என்பதை மேனாட்டு நிபுணர்களே ஒப்புக் கொள்ளுகின்றனர் . . .'

சமீபத்தில் இலங்கையைச் சேர்ந்த ஆயுள்வேத மருத்துவர் ஒருவர் ஆயுள்வேதமுறைப்படி மேற்கொண்ட கண் அறுவைச் சிகிச்சை பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன. அறுவைச் சிகிச்சை ஆயுள்வேத மருத்துவர்க்கு முற்றிலும் புதியதொரு விடயம் அன்று. ஆயுள்வேத மருத்துவத்தில் சல்லியதந்திரம் அல்லது சல்லியக் கிரியை எனப்படும் அறுவைச் சிகிச்சைத் துறையானது முன்னுளில் உன்னதமானதொரு நிலையில் இருந்துள்ளதென்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

கி. பி. 16ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஈழத்தில் எழுந்த தமிழ் மருத்துவ நூலான 'பரராசசேகரம்' 'சத்திர விதியை' அகத்தியர் தமிழாற் செய்திருப்பதாகக்கூறி அதுபற்றி மேற்கொண்டு எதுவும் கூருது விட்டது. எனினும் 'அகஸ்தியர் சஸ்திராயுதவிதி' என்னும் பெயரில் இன்று கிடைக்கப் பெறும் நூலில் அறுவைச் சிகிச்சைக்கு வேண்டப்பெறும் இருபத்தியாறு ஆயுதங்களின் விபரங்கள் மட்டுமே காணப் படுகின்றன.

**கலாநிதி பால. சிவகடாட்சம்**

புராதன இந்தியாவில் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட சாதாரண தண்டனைகளுள் ஒன்று அவர்களின் காது, மூக்கு போன்ற உறுப்புக்களைத் துண்டித்துவிடுதலாகும். அறுபட்ட அங்கங்களைச் சீர்செய்து கொள்ளத் தண்டனை பெற்றோர் மருத்துவரை நாடினர். நோயாளியின் கன்னத்தில் இருந்து தேவைப்படும் தசையை அறுத்தெடுத்து அதனைக்கொண்டு குறைபட்ட மூக்கையோ, காதையோ சீர்செய்துகொள்ளமுடியும் என்றதொரு கருத்தை முதன் முதலிலே தெரிவித்தவர் புராதன ஆயுள்வேத நூலாசிரியரான சுஸ்ருதர் ஆவார். பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை, நாசி அறுவைச் சிகிச்சை போன்ற நவீன அறுவைச் சிகிச்சை முறைகளுக்கான உத்தியை அளித்தது சுஸ்ருதரின் மேற்படி ஆலோசனையே ஆகும் என்பதை மேனாட்டு அறுவைச் சிகிச்சை நிபுணர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆயுள்வேத மருத்துவராற் பயன்படுத்தப்பெற்ற அறுவைச் சிகிச்சைக் கருவிகள் மேனாட்டு அறிஞர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளன. புராதன ஆயுள்வேத நூல்களுள் மிகச் சிறப்பு வாய்ந்தவை 'சரக சம்ஹித' மற்றும் 'சுஸ்ருத சம்ஹித' என்பனவாகும். அறுவைச் சிகிச்சையைப் பிரதானமாக எடுத்தாண்டுள்ள நூல் சுஸ்ருத சம்ஹித ஆகும். இந்நூல் கி. பி. ஏழாம் நூற்றுண்டளவில் அதன் தற்போதைய வடிவத்தைப் பெற்றிருத்தல் கூடும் எனக் கருதப்படுகிறது. அறுவைச் சிகிச்சை நீங்கலாக ஏனைய மருத்துவத்துறைகள் அனைத்தையும் விபரிக்கும் 'சரக சம்ஹத' கி. பி. 1ம் நூற்றுண்டுக்கு முற்பட்டதாகும்.

**அறுவைக்கான ஆயுதங்கள் 26**

கத்தி, சத்திரம், குறும்பி வாங்கி, முகவாதனன், முள் வாங்கி, ஆழிக்கோல், பிறைக் கோல், கத்தரிக்கோல், பரகரைவாங்கி, முச்சிலாகை, முனிமொழி, ஓட்டுக்கோல், அட்டக்கோல், ஊசி, செப்புக் குழை, சலாகை, வட்டகை, பஞ்சமுகம், செப்புச் சலாகை, கொம்பு, குடோரி, வெண்கலக்குழல், ஈயச்சலாகை, காயக்கோல், தெண்டுசலாகை, நயனகத்தி என்பவையே இவ்விருபத்தியாறு ஆயுதங்களாகும். இவற்றுள் பிரதானமான 'சத்திரம்' என்னும் ஆயுதம் 6 அங்குல நீளமும் ஏறத்தாழ 30கிராம் நிறையும் உடையது. வேப்பிலை போன்ற அமைப்புடைய இவ்வாயுதம் பிளவை, கட்டி போன்றவற்றை அறுக்கப்பயன்படுவதாகும். இவ்வாயுதத்தின் பெயர் கொண்டே அறுவைச் சிகிச்சையானது 'சத்திர சிகிச்சை' என்றும் அழைக்கப்பெறலாயிற்று.

ஆரம்பகால ஆயுள்வேத மருத்துவத்தில் சிறப்பானதொருஇடத்தைப்பெற்றிருந்த அறுவைச் சிகிச்சைத்துறை பிற் காலத்தில் புறக்கணிக்கப் பெற்றதுடன் அதன் சிறப்புக்கள் அனைத்தும் படிப்படியாக இழக்கப்படலாயின. ஆயுள்வேத மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சையின் தேய்வுக்கான காரணங்கள் பலவாகும்.

அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர்க்கு மனித உடலமைபபு பற்றிய விரிவான அறிவு அவசியமாகும். ஆயினும், பிராமண குலத்தவரான புராதன இந்தியாவின் ஆயுள்வேதியர் பிணத்தைத் தீண்டுவதையோ அதனை அறுத்து ஆராய்வதையோ அறவே வெறுத்தனர். ஆயுள்வேத நூலாசிரியரான 'சுஸ்ருதர்' பிணத்தைக் கங்கையில் அமிழ்த்தி வைப்பதன் மூலம் அது கட்டம் கட்டமாகச் சிதைவடையும்போது மனித உடலின் அமைப்பைக் கண்டறிந்து கொள்ளமுடியும் என ஆலோசனை வழங்கியுள்ளார். பிணத்தை அறுத்து ஆராய்வதில் பண்டைய இந்திய மருத்துவர்களுக்கு இருந்த அருவருப்பினை சுஸ்ருதரின் ஆலோசனை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

அறுவைச் சிகிச்சைத்துறை வைத்தியத்துறையுடன் தொடர்புகொண்டதாக இருந்தாலும், பிராமணர் அல்லாத வகுப்பினரால் மட்டுமே அது செய்யப்பட்டு வந்திருக்கலாம் என நிச்சயிப்பதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. பண்டுதொட்டு வைத்தியம், சல்லியக்கிரியை (அறுவைச் சிகிச்சை ஆகிய இவ்விரு துறைகள் பற்றிய ஆராய்ச்சிகளும் பக்கம் பக்கமாக வெவ்வேறு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அறுவைச் சிகிச்சை வேண்டப்படும் வியாதிகளுக்கு சல்லியக்கிரியையாளரை நாடும்படி 'சரக சம்ஹித'வில்ஆலோசனை கூறப்படுவதிலிருந்து கி. பி. முதலாம் நூற்றுண்டுக்கு முன்பிருந்தே இவ்விரு சிகிச்சை முறைகளும் வெவ்வேறு பிரிவினராற் கையாளப்பட்டு வந்துள்ளன என்பதை ஊகிக்க முடியும். வைத்தியத்துறையைப் பிராமணர் கவனித்து வந்த அதே நேரத்தில் சல்லியக்கிரியைத் துறையைப் பிராமணர் அல்லாத வகுப்பினர் கவனித்துவந்துள்ளனர். சல்லியக்கிரியை அறுவைச் சிகிச்சையின்போது இரத்தம் சிந்துதல் புண்பட்ட மேனியைத் தீண்டல் ஆகியன சம்பந்தப்படுவதால் அதனை ஓர் இழிவான தொழிலாகக் கருதிப் பிராமணர் செய்ய மறுத்திருக்கலாம்.

**'வீரசோழன் ஆதுலசாலை'**

வீரசோழன் (கி. பி. 1063-1069) ஆட்சிக் காலத்திற்குரிய திருமுக்கூடற்கோயில் சாசனம் அக்காலப் பகுதியில் 'வீரசோழன் ஆதுலசாலை' எனப்பெயர் கொண்ட வைத்தியசாலை பற்றிய அதிகமான விபரங்களைத் தந்துள்ளது

திருமுக்கூடற் கோயில் சாசனம் தெரிவிக்கும் வீரசோழன் ஆதுலசாலையில் பதினைந்து நோயாளர் படுப்பதற்கே ஒழுங்குகள் செய்யப்பட்டமையைக் கவனிக்கையில் அது ஒரு சிறிய அளவிலான வைத்தியசாலையாக இருந்திருக்கிறதெனக் கொள்ளமுடியும். இவ்வைத்தியசாலையின் அதிகாரிகளுள் ஒருவனுக "வைத்தியம் சொல்வோன்" குறிப்பிடப்பெறுகிறுன். தற்காலத்தில் 'டாக்டர்' என அழைக்கப்படும் வைத்தியஅதிகாரியை இங்கு குறிப்பிடப்படும் 'வைத்தியம் சொல்வோன்' ஒத்திருந்தான் எனக் கூறலாம். வைத்தியம் சொல்வோனுக்கு அடுத்த தரத்தில் இருந்தவன் 'பரியாரம் பண்ணுவோன்' என அழைக்கப்பட்டவனுவான். தற்கால 'அபபோதிக்கரி'க்கு உரிய அந்தஸ்தை இவன் பெற்றிருந்தான் எனலாம். இவர்களுடன் கூடவே 'பரியாரம் பண்ணி மருந்திடும் பெண்'களும் இருந்தனர்.

வீரசோழன் ஆதுலசாலையில் அறுவைச் சிகிச்சை புரிபவனும் இருந்தான் என்பதைச் "சல்லியக் கிரியை பண்ணுவான்" [Surgeon]பற்றிய விபரங்கள் தெரிவிக்கின்றன. சல்லியக் கிரியை பண்ணுவானுக்கு உதவிபுரிய 'நாவிசன்' ஒருவனும் நியமிக்கப்பட்டிருந்தான். மேற்படி ஆதுலசாலையில் கடமை புரிந்த ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் பற்றியும் திருமுக்கூடற் சாசனம் தகவல் தருகிறது. அத்தகவல்களின்படி வீரசோழன் ஆதுலசாலையைச் சேர்ந்த சல்லியக் கிரியை பண்ணுவோனுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் ஏனைய அதாவது வைத்தியம் சொல்வோன், பரியாரம் பண்ணுவோன் போன்ற ஊழியர்கட்கு அளிக்கப்பட்ட ஊதியத்திலும் குறைவானதாகும். இத்தகைய வேறுபாட்டுக்குக் காரணம் சல்லியக் கிரியை இழிவான தொழிலாகக் கருதப்பட்டு அது பிராமணரல்லாத வேறு வகுப்பினரால் செய்யப்பட்டு வந்தமையே எனலாம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## அல்லல் தீர்க்கும் அம்பாள்

இராகம்...ஆனந்த பைரவி தாளம்—ஆதி

பல்லவி

வேவிலந்தை அம்மாள் வெற்றிக்கொடி தாங்கி
தாவி வடம் பிடிக்க தையல் இங்கு வாருளே
(வேவி)

அனுபல்லவி

காவிய கரகங்களும் கற்பூரச் சட்டிகளும்
பாவையின் கண்ணிற்பட பவனியாய் தேரில் வாருள்

சரணம்

அன்புடையோர் தங்கள் அவலங்கள் நீங்கவென
பொன்போன்ற மேனி பொங்க பொற்தேரில் வாருளின்று
கன்னித் தமிழ் அணங்கு காவிரிப் பூம்பட்டினத்தில்
அன்னையை நினைந்திடவே அருட் சிலம்பு காட்டியவள்.
(வேவி)

—அல்வையூர் மருதன்

**இன்று அல்வாய் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேர்த்திருவிழா**

**ஆரம்பக் கல்வி**

# ஆங்கில கல்வியும் சுதேச மொழிப் பாதிப்பும்

(முன் தொடர்ச்சி)

இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் ஆரம்பக் கல்வி சிறந்த முறையில் ஒழுங்காக்கம் பெற்றிருந்தது. ஆனல் பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றியதும் இவ்வளர்ச்சி நலிவுற்றுத் தாழ்வு கண்டது. நாட்டின் ஆட்சிப்பொறுப்பு தொடக்கத்தில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகச் சங்கத்திடமே இருந்தது. வர்த்தகச் சங்கம் முழுமையாக வர்த்தக நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டது. இந்நாட்டின் சமூக, கல்வி அபிவிருத்தியிலோ மத மாற்றத்திலோ சங்கம் சிரத்தையற்றிருந்தது. பிரித்தானியாவிலும் இக்காலப்பகுதியில் மக்களுக்குக் கல்வியளிப்பது அரசின் கடமை என்றஉணர்வு இல்லாதிருந்தது. 1802 - ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானிய முடிக்குரிய நாடு ஆக்கப்பட்டபோதும், வர்த்தகம், வருமானம் என்பன இன்னும் சங்கத்தின் பொறுப்பிலேயே இருந்தன. இத்தகைய இரட்டை ஆட்சி முறையினுல் நாட்டின் கல்வி பொறுப்பாளரற்றுச் சீர்குலைந்திருந்தது. ஏற்கனவே இருந்த பாடசாலைகளைத் தன்னும் கொண்டு நடத்த முடியாமலிருந்தது.

ஆள்பதியாகப் பிரடறிக் நோத் [1798—1805] இருந்த காலத்தில், ஆரம்பக் கல்விப் பாடசாலைகளைச் சீரமைக்கும் முயற்சிகள் ஓரளவு எடுக்கப்பட்டன. ஆள்பதி பிறவுண்றிக் [1812—18.0] என்பவர் கிறீத்த சமய விடயங்களில் சிரத்தை உள்ளவராக இருந்தமையினுல், அதற்குச் சாதனமாகக் கல்வி வளர்ச்சி முயற்சிகளை மேற்கொண்டார். கைத்தொழிற் புரட்சி, பிரான்சியப் புரட்சி ஆகியவற்றின் விளைவாக இங்கிலாந்திலும் கருத்துப் புரட்சி ஏற்பட்டது. கல்வியிலும் புரட்சிகரமான கருத்துக்கள் தோன்றின. பொது மக்கள் கல்வி, கல்விக்கு அரச உதவி அறப்பள்ளிகளின் தோற்றம் என்பன பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கையிலும் பிரதிபலித்தன. கிறீத்தவ சமயக் குழுக்கள் பல இலங்கைக்கு வர ஆள்பதி பிறவுண்றிக் சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தினர். கல்விப் பொறுப்பு இக்குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கல்வி கிறீத்தவ சமயம் சார்ந்ததாக இருந்ததில் வியப்பில்லை. இங்கிலாந்து திருச்சபை, வெஸ்லியன் மெதடிஸ்த திருச்சபை, அமெரிக்க மிஷனரிமார் என்பன குறிப்பிடத்தக்க சமயக் குழுவினர் ஆகும்.

1833ஆம்ஆண்டுவரை வெஸ்லியன் மெதடிஸ்த குழுவினர் யாழ்ப்பாணப் பகுதிகளில் 21 பள்ளிகளை நிறுவினர் சுதேசப்பிள்ளைகளுக்கு கிறீத்தவ மதப் பின்னணியில் எழுத, வாசிக்கவும் விவிலிய நூலை வாசித்து விளங்கிக்கொள்ளவும் கற்பிக்கப்பட்டது. ஆனல் உயர் வர்க்கத்தினருக்கு, இங்கிலாந்தில் அமைந்திருந்த கல்வி முறையை ஒத்த நிலையில் முன்னேற்றமான கல்வி பிரத்தியேகமாக நிறுவப்பட்டிருந்த பாடசாலைகளில் அளிக்கப்பட்டது. வர்த்தக சங்கத்தினர் பெண்களுக்கு விதிக்கப்படிருந்த ஆபரணவரி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து பெண்களும் கல்விபெற வாய்ப்பிருந்தது. 1916-இல் இலங்கை வந்த அமெரிக்க மிஷனரிமார் தமது செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டனர். கிராமப் பள்ளிகள், மத்திய பாடசாலைகள், இலவச விடுதிப் பாடசாலைகள் என்பனவற்றை நிறுவினர். தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, உடுவில், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இவர்களின் செல்வாக்கு மிகுந்திருந்தது. அச்சுயந்திரங்களை நிறுவிப் பாட நூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கினர் தெல்லிப்பழையில் ஆண்களுக்கும், உடுவிலில் பெண்களுக்குமாக விடுதிகளோடு இணைந்த உயர்கல்

**கு. சோமசுந்தரம்**
(பிரதம கல்வி அதிகாரி)

(8-ம் பக்கம் பார்க்க)

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

18

மறுபடியும் கலியாணம் செய்வதுதான் நல்லது என்று கந்தையர் சொன்னதை கேட்டதும் வசந்தமலர் கலவரம் அடைந்தாள்.

''வசந்தமலர். நான் வேண்டுமென்று சொல்லேல்லே உன்னைப்போல் இளம் பெண்கள் உப்பிடி விதவையாக இருக்க இந்த சனங்கள் விடமாட்டுதுகள். நீ எப்படித்தான் ஒழுக்கமாகப் பண்பாட்டோடை இருந்தாலும் எல்லாரும் சந்தேகக்கண்ணுடன்தான் பார்ப்பினம். இது ஒரு வழக்கமாகி விட்டது. மறுமணம் என்று சொன்னால் மனக்கஷ்டமாகத்தான் இருக்கும் ஆனால் அதை விட வழி வேறை ஒன்றும் இல்லை'' என்று கந்தையர் சொன்னார். ''அப்பு-எப்படி நீங்கள் சொல்லுறதை ஏற்றுக் கொள்ளுறது. நான் அப்பிடிச் செய்தால் எல்லோரும் கதைக்கிறது உண்மையாகிவிடுமே. அதோடை நான் அவரோடை வாழ்ந்த இலட்சிய வாழ்க்கை எல்லாம் வெறும் கனவாக போலி வேஷமாக பொய்யான சம்பவமாக போய் விடுமே''

''நீ சொல்லுறது உண்மைதான் வசந்தமலர். நீ அப்படி வாழ்ந்த இலட்சிய வாழ்க்கை எல்லாம் இப்ப என்ன மாதிரி போச்சுது தெரியுமே. அப்ப சனம் என்ன மாதிரி கதைச்சாலும் உன்ரை புருஷனுடை துணிச்சலோடை சீவித்தாய். ஆனால் இப்ப அப்படி வாழ உன்னால் முடியாது.''

''அது சரிதான் அப்பு எப்படி நான் ஒன்றொரு வாழ்க்கையை உண்டாக்கிறது. அப்படிச் செய்தால் இந்த சனங்கள் என்னை சும்மா விட்டிடுமே. இப்ப கதைக்கிற கதைகளையெல்லாம் உண்மையாக்கி என்னை வாழவிடுமே.

''அது கொஞ்சநாளைக்குத்தான் அப்படி இருக்கும். பிறகு எல்லாம்சரியாகிவிடும். ஆனால் உப்பிடி தனிய இருந்தால் சாகும்வரைக்கும் அவச் சொல்தான் கேட்கவேண்டியிருக்கும்.''

''அப்பு நீங்கள் என்னதான் சொன்னாலும் உங்கடை கருத்தை. என்னால் ஏற்றுக் கொள்ள முடியல்லை. ஒருவேளை உந்தப் பிரச்சனைகளால் செத்துப்போகக்கூடிய ஒரு யோசனை வந்தாலும் வரும் ஒழிய மறுமணம்செய்யக்கூடிய சிந்தனை வராது—'' என்று வசந்தமலர் சொன்னாள்.

''பிள்ளை நான் உன்னைக் கட்டாயப்படுத்த விரும்பேல்லே. நீ மானத்தோடை வாழுறதுக்கு மறுமணத்தை விட வேறு வழியில்லை. ஒரு பெண்ணுக்கு யார் பாதுகாப்பாக இருந்தாலும் பிரயோசனம் இல்லை. பெற்ற தகப்பன்கூட உன்னைப்போல ஒரு பெண்ணுக்கு துணையாக இருந்து— எந்தவிதமான பயனும் இல்லை. ஆனால் புருஷன் என்ற ஒருவன் இருந்தால் மானத்தோடை வாழலாம். இல்லாட்டி அங்கை பார்க்கிறாள். இஞ்சை சிரிக்கிறாள், அவனோடை கதைக்கிறாள். அங்கு போறாள். என்று நெடுகக் கதைப்பினம். அதில் இருந்து கடைசிவரை மீள முடியாது'' என்று கந்தையர் சொன்னார்.

வசந்தமலர் எதுவுமே பேசவில்லை. ''வசந்தமலர் நீ...... கனக்க யோசிக்காதே இன்றைக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. கொஞ்சநாள் கழிச்சுத் தன்னும் உன்ரை முடிவைச் சொல்லு.''

''நான் என்னத்தைச் சொல்லுறது அப்பு என்ரை வாழ்க்கை இப்படியே முடியட்டும்.''

மனம் நொந்தவாறு கந்தையர் அந்த வீட்டைவிட்டு வெளியேறினார்.

கந்தையர் தங்கலட்சுமி வீட்டை விட்டு வெளியேறிய போது எதிர்ப்பட்டவர் பொன்னுத்துரை மாஸ்டர்

''உங்களைத் தேடித்தான் வீட்டுக்குப் போனனான். நல்ல காலம். உங்களை இஞ்சை கண்டது...'' என்றார் பொன்னுத்துரை மாஸ்டர்.

''என்ன தம்பி என்ன விசியம்...''

''வசந்தமலரைப் பற்றித்தான் உங்களோடை கதைக்க வேணும் என்று நினைத்தனான்...''

''ஏன் தம்பி...''

''சில அலுவல்கள் காரணமாக வசந்தமலரை காண இரண்டு மூன்று தடவை தங்கலட்சுமி வீட்டுக்கு போனனான். அதை வைச்சுக்கொண்டு எல்லாரும் கண்டபடிகதைக்கினம் எனக்கு அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் வசந்தமலருடைய வாழ்க்கை தான் வீணாக போகுதே என்று கவலையாக இருக்கு...''

''எனக்கு எல்லாம் தெரியும் தம்பி. சனங்களுக்கு உப்பிடி கண்டபடி கதைக்கிறது. ஓர்பழக்கமாகிவிட்டுது. என்ன செய்ய. அதற்கு தங்கலட்சுமி போல ஆட்களும் உதவி செய்யினம்.

''அது உண்மை தான் எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்யவேணும்''

''என்ன தம்பி—''

''வசந்தமலர் உப்பிடி இருக்கிறதைவிட... ஒரு கலியாணம் செய்தால் நல்லாய் இருக்கும் என்று நினைக்கிறன். அதுக்கு அவள் சம்மதிக்கிறாளோ தெரியாது. அவளை சம்மதிக்கச் செய்யவேண்டியது உங்கடை பொறுப்பு. அவள் மாத்திரம் சம்மதித்தால் ஒரு நல்ல இடமாக பார்த்து கலியாணம் செய்துவைக்கலாம். அவள் இப்பஇருக்கிற இடமும் பிழை. அந்த வீட்டுக்காரரும் ஊராட்களும் சேர்ந்து அவளை நிம்மதியாக வாழவிடமாட்டினம் என்று பொன்னுத்துரை மாஸ்டர் சொல்ல கந்தையர் அதைக் கேட்டு சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்''

''நானும் உந்த முடிவுக்கு வந்துதான் இப்ப... வசந்தமலரிட்டைப் போட்டு வாறன்''

''உண்மையாகவோ...''

''உண்மையாகத் தம்பி''

''அவள் என்ன சொன்னாள்''

''தம்பி... அவள்.. என்ன சொல்லுவள் கொஞ்சம் நல்ல பெண்கள் எல்லாரும் சொல்லுறதை தான் அவளும் சொல்லுகின்றாள்''

''என்ன வென்று...''

''தான் கடைசிவரைக்கும் அதற்கு சம்மதிக்கமாட்டாளாம். வேண்டுமென்றால் செத்துப்போக வழிபார்க்கிறாளாம்...''

''சரியான முட்டாள் கதை கதைக்கிறாளே''

''ஓம் தம்பி அவளை எப்பிடி வழிக்குகொண்டுவாறது என்று தெரியாமல் கிடக்கு''

''உங்களைவிட யார்தான்... இருக்கினம் நான்போய் கதைப்பதும் எரிகிற நெருப்பிலே எண்ணெய் ஊத்திற மாதிரி போயிடும். என்ன செய்யிறது என்றுதான் விளங்கேல்லை''

''தம்பி நீ ஒன்று செய்யலாம் உன்ரை பெண்சாதியை இடைக்கிடை அனுப்பிப்பார். அவளும் ஏதாவது மூளைசொல்லிப் பார்க்கட்டும். நானும் அடிக்கடி அவளைக்கண்டு கதைத்துப் பாக்கிறன். இனிக் கடவுள்தான் அவளுக்கு நல்ல மூளையைக் கொடுக்கவேண்டும்'' என்று கந்தையர் சொன்னார்.

அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டு பொன்னுத்துரை மாஸ்டர் கந்தையரிடம் விடைபெற்றுபோய்விட்டார் பிறகு கந்தையர் தனது வீட்டுக்கு போனார்.

வெளிவிறாந்தையில் புவன சுந்தரி அமர்ந்திருந்தாள்.

''என்ன தங்கலட்சுமி வீட்டாலேயோ அங்கை என்ன அலுவல் பொன்னுத்துரை மாஸ்டரும் வந்திட்டுப்போறார் அவருக்கு புறோக்கர் வேலை பார்க்கிறது போல கிடக்கு வயதுபோன காலத்தில உடம்பு ஒரு இடத்தில இருக்காதாக்கும்'' என்று புவன சுந்தரி பேசுவது கேட்டது.

கந்தையர் எதுவுமே பேசாமல் சுருட்டுக் கொட்டிலை நோக்கி நடந்தார்.

★

இரவு எட்டு மணிக்குமேல் இருக்கும். ரி வி யில் நியூஸ் பார்த்துவிட்டு சாரதா, சுஜாத்தா, பிரியா, தங்கலட்சுமி மாமி ஆகியோர் அந்த வீட்டின் முன்விறாந்தையில் இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்துக்கு முன்னர் தான் டியூசன் மாஸ்டர் செந்தூரன் விடைபெற்றுப்போயிருந்தார். அன்றைக்கு சுஜாத்தாவின் காதலன் திருவரதன் வரவில்லை.

சிறிது நேரம் தாங்கள் சமீபத்தில் பார்த்த படம் சம்பந்தமாக தாயும் பிள்ளைகளும் விமர்சித்தார்கள். பிறகு ஊர் புதினங்களில் இறங்கினார்கள்.

''எங்கடை முத்துவேலரின்ரை பெடியன் முடிச்ச பொம்பிளையைக் கண்டனீங்களே? அம்மா'' என சாரதா கேட்டாள்.

'அதுவும்ஒரு பொம்பிளையே' என்று சலித்துக்கொண்டாள் தங்கலட்சுமி.

''அம்மா சொல்லுறது சரிதான்'' என்று சாரதா சொன்னாள்.

''ஏன் அம்மா'' என சுஜாத்தா கேட்டாள்.

''ஆள் நெருப்புப்பெட்டி மாதிரி, அவன் என்னத்தைக் கண்டுதான் கலியாணம்முடிக்க சம்மதித்தானோ...'' எனத் தங்கலட்சுமி சொல்ல அவளது பெண்கள் உரத்த குரலில் சிரித்தார்கள்.

''அதோடை இன்னுமொரு விசியம். அவள் நடககிறதும் ஒருமாதிரி'' என சாரதா சொன்னாள்.

''பல்லும் கொஞ்சம் முன்னுக்கு தள்ளிக்கொண்டிருக்கு'

''அவளையும் ஒரு பொம்பிளை என்றுதானே அவனும் கூட்டிக்கொண்டு திரியிறான்''

''அவனும் ஒரு விசரன் மாதிரித்தானே. ஆனபடியால் ஒத்துப்போகும்'' என்று சாரதா சொல்ல பழையபடி மற்றவர்கள் சிரித்தார்கள்.

பின் விறாந்தையில் அமர்ந்திருந்த வசந்தமலருக்கு அவர்களது பேச்சு வேம்பாக கசந்தது. வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கும்போது தேவையில்லாத ஒன்றைப் பற்றி வீணாக இவர்கள் கதைக்கின்றார்களே. இதனால் என்ன பிரயோசனம் என அவள் நினைக்கும்போதே முன் விறாந்தை பெரிதாக அமளி ஏற்பட ஒரு ஆணின் உரத்த குரல் கேட்டது' முன் பின் பழக்கமில்லாத அந்தக் குரலைக் கேட்ட வசந்தமலர் ஆச்சரியப்பட்டாலும் தான் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

வெளி விறாந்தையில் இருந்த தங்கலட்சுமியும், ஏனையவர்களும் திகைத்தவர்களாகத் தாங்கள் இருந்த இடத்தை விட்டு எழுந்தார்கள்.

''வாருங்கோ தம்பி வாருங்கோ'' என்று தங்கலட்சுமியும் ''வாருங்கோ அத்தான்'' என சுஜாத்தாவும் அந்த ஆணை வரவேற்க, சாரதா அந்த இடத்தைவிட்டு நகர்ந்து, வீட்டுக்குள் புகுந்து' ஹாலின் கதவுக்குப் பின்னால் மறைந்து நின்று வெளி விறாந்தையை நோக்கினாள.

''எனக்கு வரவேற்புத் தேவையில்லை. எங்கே அந்தத் தேவடியாள். கூப்பிடுங்கோ அவளை'' என வந்தவன் சத்தம் போட்டான்.

''தம்பி சத்தம் போடாதேங்கோ இப்படி வந்திருங்கோ'' என தங்கலட்சுமி சமாதானம் செய்ய முயன்றாள்.

ஆனால் அவன் கேட்பதாக இல்லை. அவனது தோற்றமும் குழப்பமாக இருந்தது. கலைந்து போன தலைமயிரும், வாடிய முகமும், மழிக்கப்படாத தாடியும், மீசையும். கசங்கிய லோங்ஸ், சேட்டும் அவனை ஒரு புதுவிதமான மனிதனாகக் காட்டியது.

மொத்தத்தில் அவன் நிறை வெறியில் விறாந்தையின் முன்னால் இருந்த முற்றத்தில் நின்றுகொண்டிருந்தான். கால்கள் தடுமாற, அவன் நின்றகோலம் எல்லோரையும் கலவரப்படுத்தியது.

''எங்கே அந்த மோசக்காரத் தேவடியாள். அவள் மாப்பிள்ளை பிடிக்கிறாளாம். அவளுக்கு என்னைப் பற்றித் தெரியாது போல கிடக்கு'' அவன் பெலத்த குரலில் கூறினான்.

''ஐயோ தம்பி கண்டபடி சத்தம் போட்டுக் கதைக்காதேங்கோ. அவள் பெட்டை எந்த நேரமும் ஒரே யோசினையும் கண்ணீரும் உம்முடைய நினைவுதான். அவளை வீணாய்ப் பேசவேண்டாம். தம்பி இப்படி வந்து இருங்கோ'' என தங்கலட்சுமி சொன்னாள்.

அவன் அதைக் கேட்கவில்லை. கைகளை ஆட்டியபடி காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

,,அந்த ஆட்டக்காரி எங்கே? இஞ்சை இருந்துகொண்டு கள்ளமாய் மாப்பிள்ளை பிடிக்கிறாளாம். தெரியுமே. என்னைப் பற்றி நல்ல தேவடியாள் கூட்டத்தில் நானும் வந்து மாட்டுப்பட்டன்'' என அவன் கூறியவாறு விறுந்தைப்படி வழியாக மேலே ஏறினான்.

''தம்பி தம்பி வந்திருங்கோ. நான் அவளைக் கூப்பிடுறன்''

''நான் இஞ்சை இருக்க வரவில்லை. உங்கடை கூத்தெல்லாம் எனக்குத் தெரியும். றோட்டில் போறவனுக்குப் பல்லைக் காட்டுற கூட்டம் தானே நாய்ப் பிறப்புகள்'' என அவன் பேசினான்.

ஹாலினுள் நின்ற சாரதாவுக்கு நெஞ்சு படபடக்க, மிகுந்த கலவரத்துடன் காணப்பட்டாள். தன் கணவனான கணநாதனை அவள் அப்போது எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)

## நாம் யார்

நாம் யாரென்பதனை
யார்தான் அறிவாரோ!
யார்தான் அறிந்தாலும்
நாமே அறிவோமோ!

போதனைகள் செய்வதிலே
சாதனைகள் செய்பவர்நாம்!
சாதனைகள் செய்துமென்ன!
வேதனைகள் கொள்பவர் நாம்!

சீர்வரிசை பெறும்திறமை
சீராகப் பெற்றவர்நாம்?
சீராகப் பெற்றதனால்
சீரழிந்து நிற்பவர்நாம்??

தாழ்வுயர்வு பார்ப்பதிலே
மிகவுயர்ந்து நிற்பவர்நாம்!
மிகவுயர்ந்து நிற்பதனால்
மிகத்தாழ்ந்து போனவர்நாம்!

அயலவனைக் கெடுப்பதற்கு
இன்னுயிரைக் கொடுப்பவர்
நாம்!
இன்னுயிரைக் கொடுத்து
விட்டுப்
பின்னுணர்ந்து தவிப்பவர்நாம்

அடுத்தவரின் நீதியினை
எதிர்பார்த்து நிற்பவர் நாம்!
அடுத்தவர்க்கு நீதியினைப்
புதிராக்கி வைப்பவர்நாம்!!

பழம்பெருமை சொல்வதிலே
களங்கள்பல வென்றவர் நாம்!
களங்கள்பல வென்றுமென்ன
நலங்கள்பல இழந்தவர்நாம்!

ஒற்றுமை பேசுவதில்
ஒப்புவமை அற்றவர்நாம்!
ஒப்புவமை அற்றதனால்
செப்புரிமை விட்டவா நாம்!!

அரங்கேறி முழங்குவதில்
திறமைபெற்றுத் திகழ்பவர்
நாம்!
திறமையுடன்திகழ்ந்துமென்ன
இறைமையற்று உழல்பவர்
நாம்!

அடுத்தவரின் செயல்களிலே
பிழைசொல்ல வல்லவர் நாம்!
பிழைசொல்லும்
வல்லமையால்
தழைக்கும் வழிமறந்தவர்நாம்

முரண்பட்டு வாழ்வதற்கே
வரம்பெற்று வந்தவர் நாம்!
வரம்பெற்று வந்ததனால்
அரண் அற்றுத் தாழ்ந்தவர்
நாம்!!

குறைகளினைச்சொல்லியென்ன
குறைநிறையப் பெற்றவர்நாம்
குறை நிறையப் பெற்றதனால்
நிறைகுறையப் பெற்றவர்நாம்

—'முருகு'

## பட்டப்படிப்பு

பட்டப் படிப்பினிலே
பல கோடி சோதனைகள்
பாவம் இவர்கள்
படும்பாடு கொஞ்சமல்ல
பகல் இரவு ரியூசன்
அதனுக்கும் மேலாக
தரப்படுத்தல் வகைப்படுத்தல்
எத்தனையோ சங்கடங்கள்
பட்டத்தைப் பெற்றே
வந்தாலும் பின்னலோ
வேலையில்லாத்திண்டாட்டம்
சொல்லும் தரமல்ல
பாவம் இவர்க்கு
விடிவொன்று கிட்டாதா
பட்டப்படிப்பின்
பயனை இவர் எய்தாரா?

வ. எ. ஜெயசீலன்.

## ஆன்ம

(5 ம்பக்கத் தொடர்ச்சி)

டிய ஆன்மீக அறிவு, குருவிடமிருந்த்த கிடைக்கப் பெறுகின்றது. கௌத பாத சார்யரிடமிருந்து, கோவிந்தச் சாரியாருக்கும், கோவிந்த தச்சாரியாரிடமிருந்து சங்கரருக்கும், சங்கரரிடமிருந்து சுரேஸ்வரச் சாரியாருக்கும் இந்த ஆன்மீக ஞானம் சென்றதைக் காணக் கூடியதாகவுள்ளது.

## அறுவைச் சிகிச்சை...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

போதிய வருமானமும் உரிய மதிப்பும் தராத சல்லியக் கிரியை(அறுவைச்சிகிச்சை) யினைத் தொழிலாகக் கொண்டோர் படிப்படியாகத் தமது தொழிலில் ஆர்வத்தை இழக்கலாயினர்.

### சல்லியக் கிரியை

நாளடைவில் சல்லியக் கிரியையில் நன்கு தேர்ச்சிபெற்று அத்தொழிலில் ஈடுபட்டோரின் எண்ணிக்கை குறையவே அதுகாலவரை சல்லியக் கிரியையாளர்க்கு உதவியாக இருந்து அறுவைச் சிகிச்சையின்போது மயிர் களைதல், வெட்டுதல் போன்றவற்றைச் செய்து வந்த நாவிசர்களே சல்லியக் கிரியையாளராகவும் பணியாற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சல்லியக் கிரியை பண்ணுவோருக்கு உதவியாக இருந்து வந்ததன்மூலம் பெற்ற அனுபவத்தைப் பயன்படுத்தி நாவிசர்களும் தம் மாலான அறுவைச் சிகிச்சைகளைச் செய்யத் தொடங்கினர். நாவிசர்கள் ''பரியாரி'' என்னும் பெயரைப் பெற்றமைக்கு இதுவே காரணமாகும். ஆயினும் பரியாரிகளான நாவிசர்களால் சாதாரணமான சில அறுவைச் சிகிச்சைகளையே செய்யமுடிந்தது. புராதன ஆயுள்வேதத்தில் சல்லியக் கிரியை பெற்றிருந்த சிறப்புக்கள் தேய்ந்து மறைந்தன. உடலில் தோன்றும் கழலைகள், கட்டிகள் என்பவற்றை வெட்டி அகற்றுதல், வெட்டப்பட்ட புண் ஆறுவதற்காகச் சூடேற்றப்பட்ட முட்டியால் சுடுதல், புரையோடிய பழைய புண்களின் தோலை உரிந்துச் சுத்தம் செய்தல், வலிநோய் கண்டவர்களுக்குக் காய்ச்சிய இரும்பினால் சிரசினில் சுடல். உடலில் உள்ள அசுத்த நீரையும் சீழையும் ஊசியால் குத்தி வெளியேற்றுதல், கண்ணில் ஏற்படும்படலத்தை ஊசிகொண்டு உரித்தல் போன்ற சில சிகிச்சைகளைப் பிற்காலத்தில் நாவிசர்கள் மேற்கொண்டனர்.

இந்தியாவில் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் அறுவைச் சிகிச்சைத் தொழில் புரிவோருக்கு உரிய கௌரவம் அளிக்கப்படாத ஒரு நிலையினையே நாம் காண்கிறோம். கி. பி 1163 இல் ஏற்படுத்தப்பட்ட போப் போல் பிரகடனத்தின்படி ஐரோப்பாவில் மதகுருமார் இரத்தம் சிந்தும் தொழில் புரிவதற்குத் தடைவிதிக்கப்பட்டதன் விளைவாக அறுவைச் சிகிச்சை சிகை அலங்கரிப்போரிடம் (நாவிசர்களிடம்) விடப்பட்டது என அறிய முடிகிறது. இங்கும் சல்லியக் கிரியை பிறரிடம் ஒப்படைக்கப்பட்டமைக்கு இரத்தம் சிந்தும் தொழிலாக அது காணப்பட்டமையே காரணம் எனக் கூறலாம். இங்கிலாந்தில் நான்காம் எட்வர்ட் [கி. பி. 1462] அரசரின் காலத்தில் நாவிசர்கள் சங்கமும் அறுவைச் சிகிச்சையாளர் சங்கமும் ஒன்றிணைக்கப்பட்டது. கி. பி. 1745 ஆம் ஆண்டிலேயே இவ்விரு சங்கங்களும் வெவ்வேறுகப் பிரிக்கப்பட்டன. எனினும் கி. பி. 1800 வரை Royal College of Surgeon என்றழைக்கப்பெறும் அறுவைச் சிகிச்யையாளர் சங்கம் அங்கீகாரம் பெறவில்லை. இங்கிலாந்தில் வைத்தியர்களை 'டொக்டர்' [Dr] என்றும் அறுவைச் சிகிச்சையாளரை 'மிஸ்ரர்' [Mr] என்றும் குறிப்பிடும் முறை இன்றும் இருந்துவருவதாகத் தெரிகிறது.

# 'தாயகமே தாகம்'

## ஒரு மதிப்பீடு

தாயகமே தாகம் - இது ஒரு இலட்சியப்படம். சினிமாவில் நாயகனும் - நாயகியும் விழுந்தடித்துக்கொண்டு நடிக்கும் படங்களையே பார்த்துப் பழகிவிட்டோம். சில படங்களில் அமானுஷ்ய நற்பண்புகள் நிறைந்த பாத்திரங்களைப் பார்க்கிறோம். இதிலிருந்து மாறுபட்ட கோணத்தில் பிற மனிதர்களைப்போல் மனிதர்களாய் சில பாத்திரங்களைக் காட்டுகிறது தாயகமே தாகம் என்ற வீடியோப் படம்.

தொழில்நுட்ப ரீதியில் இப்படத்தில் புதுமை ஒன்றும் இல்லை. ஆனல் அரசியல் சமூகப் பின்னணியில் பார்க்கும் போது இது ஒரு புரட்சிகரமான படம், வழக்கம்போல் காதலில் தோல்வியுற்றுக் கதருமல், கணவனைப்பிரிந்து வாடாமல், கண்டதும் காதல் கொள்ளாமல் புதுமாதிரியாகப் படத்தின் ஓட்டம் அமைகிறது.

பல பாத்திரங்கள் இருந்தும் கதை ஒன்றை உருவாக்கிக் கொள்ளாமலே படம் ஒன்றைத் தயாரித்துள்ளார்கள். இலட்சியத்தில் கருத்துக் கொண்ட ஒரு போராளி அழியாத அன்புகொண்ட தந்தை. போராளி தளர்ந்துவிடாமல் போராடி இறுதியில் மண்ணுக்காக மடிகிருன். அவன் மரணத்திலும் அழியாத வீரம். பிறிதொரு குடும்பம்—தந்தை, மகன், மகள், அக்னி சாட்சியாக ஒருவனைக் கைப்பிடிக்க சுகயோக சுபதினத்தை எதிர் பார்த்து ஏமாறுகிருள் மகள். இவர்கள் குடும்பத்திற்கு பலவிதத்திலும் சோதனை ஏற்படுகிறது. இப்பாத்திரங்கள் படும் பாடுதான் கதையாக வளர்ந்திருக்கிறது.

இந்தப்படத்தில் திருகோணமலையில் தன் இளம் மனைவியையும், பிள்ளையையும் பறிகொடுத்து தாடி மீசையுடன் மாறுவேடத்தில் வருபவர் போல் வருபவருக்கு நல்ல சான்ஸ், ஒன்றும் தெரியாதவர்போல் 'பைத்திய'மாகச் சித்தரிக்கப்படுகிருர், ஏன்? ஆனல், அவர் சீதனத்துக்குக் காசும், வெட்டிப் பொழுது போக்காமல் சுயவேலை வாய்ப்பிற்கு மூலதனமும் வழங்குகிருர். சில இடங்களில் இவரது தத்துவ விசாரங்கள் அபாரம். அது எப்படி? இது ஓர் அதிசயந்தான். பைத்தியக்காரனுக்கு எங்கிருந்து ஞானம் வந்தது? கதாசிரியர் முரண்பாட்டைத் தவிர்த்து வேறு மாதிரியாகப் புனைந்து சுவையாகச் செய்திருக்கலாம்.

முதலாளியாக வருபவரின் நடிப்பு துடிட்போடு விளங்குகிறது. துளிகூடப் பதற்றம் இல்லாமல் அமைதியாக நடிப்பது நன்ருக இருக்கிறது, ஆனல், அவரின் முகமெழுதல் (மேக் அப்) ஆறுதல் அளிக்கவில்லை. தென்னிந்திய தமிழ் சினிமாவில் வரும் பண்ணையாரின் சாயல் நடிப்பிலும் முகமெழுதுதலிலும் படிந்திருக்கின்றது. முதலாளி என்ருலே கொடுமை, இரக்கமின்மை நிறைந்த கரெக்டர் தானே தமிழ்ப் ட வழக்கம். இதிலும் அப்படியே கொஞ்சம் சிந்தித்து யாழ்ப்பாணத்து முதலாளியாக முகமெழுதியிருக்கலாம்.

சில இடங்களில் தமிழ் சினிமா பாணியில் வசனம் பேசி விறுவிறுப்பைக் கொடுத்திருக்கவேண்டாம். பாடல்கள் ஆறுதல் அளிக்கவில்லை. இதைவிடத் துணிந்து பாடல்கள்இல்லாமலே புரட்சி செய்திருக்கலாம்,

மியூசிக்கில் கவர்ச்சி இல்லை. இசைக் கருவிகளின் ஒத்திசைவைக் காணேம்? அது போனல் போகட்டும் என்ருல் இசையமைப்பு எம்மை வேதனைப்படுத்தாமலாவது இருக்கக்கூடாதா?

யுத்தக் காட்சிகள் சற்றுஅதிகமாகவே இருக்கிறது. கத்தரித்து எறியவேண்டிய காட்சிகள் பல.

படப்பிடிப்பாளர் குறை வைக்கவில்லை. ஆரம்பத்தில் ஒளி ஏனே பிகு பண்ணு கிறது. மற்றும்படி பரவாயில்லை. வெளிப்புறக் காட்சிகள் நன்ருயிருக்கின்றன. எமது கிராமங்களின் தோப்புக்களையும், துரவுகளையும் படமாக்கித் தந்துள்ளார். பார்ப்பவர்களைக் கவர்ந்திருக்கிறது இது. சத்தியஜித் ரேயின் வங்காளக் கிராமங்களை ஞாபகமூட்டுகுறது.

படம் முடிவுறும்போது விடுபடமுடியாத வியூகத்தில் சிக்கிக் கொள்ளும் இயக்குநர் திரு. கேசவராசாவிடம் பரிவும், பரிதாபமுமே ஏற்படுகிறது, காரணம் மனேபலமுள்ள ஒரு பாத்திரமாக, பிரச்னைகளைச் சமாளிக்கக்கூடிய ஒருவர் எதிர்வரும் பிரச்னைகளைச் சமாளிக்க முடியாமல் சாவது இயக்குநர் செத்து மடியவைப்பது வேதனைக்குரிய விஷயமாகும். சாவைத் தவிர வேறு வழியில்லைப் போலும். இதில் சாதனையோ, போதனையோ எதுவுமோ இல்லை. இந்தச் 'சுடலை ஞானம்' எங்கிருந்து திரு. கேசவராசாவுக்குப் பிறந்ததோ?

இடையில் சமகாலச் சமூக நோய்களான புளூபிலிம், பவுடர் பழக்கம் ஆகியவற்றையும் இயக்குநர் தொட்டும் தொடாமல் காட்டுகிருர்.

இப்படத்தில் எல்லாமே திரு. கேசவராசா தான். மற்றும் படங்களைவிடச் சற்று வித்தியாசமான படம் என்பது கொஞ்சம் சந்தோஷமான விஷயம் தான்!

—ஈ. ஆர். திருச்செல்வம்

# மாற்றான் தோட்டத்து 'மல்லிகை'

ஓ; சரத் முத்தெட்டு வேகம!  
எங்கள் தோழனே!  
பாண்டவர்க்காக நூற்றுவரில் ஒருவன்  
பரிந்துரைத்தது கதையென்றிருந்தோம்—உன்  
பாராளுமன்ற உரைகளைப் படிக்கும் வரை!  
போர் விமானம் குண்டு வீசும் இத் தீவில்,  
மனிதாபிமானம் பேச்சாக மலர்வது உன் நாவில்!  
மனித நேயம் மிக்க கலவானைப் பிரதிநிதியே நீ  
கல்கத்தா செல்லாமல் எவ்வாறு  
காந்தியின் சீடனுனாய்?  
இயந்திரத் துப்பாக்கிகளும் கவச வாகனங்களும்  
இல்லாமல் எங்கள்தோழனே, நீ  
எவ்வாறு ஈழமக்கள் இதயங்களில்  
முகாம் அமைத்தாய்?

—பவளம்

# மீண்டும் ஜூலை

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கப் பாவத்தைப் போராளிகள் தலையில் சுமத்தும் ஓர் எத்தனமாகவும் அம்முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

ஆயினும் நவாலியில் இன்பம், செல்வம் இருவருடனும் கடத்தப்பட்ட பாலேந்திராவின் உடல் அங்கு காணப்படவில்லை. அன்றும் காணப்படவில்லை. பின் என்றுமே காணப்படவில்லை.

அதுபோலவே நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியில் வைத்து அதே இரவில் கடத்தப்பட்ட இரு சகோதரிகளைத் திருமணம் புரிந்தவர்களான சகோதரர்கள் இருவர் இராயேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரது சடலங்களும் இந்நாளதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இவ்விதமாக உத்தியோகப் பற்றற்ற முறையில் மரண தண்டனைக்குள்ளானவர்களுள் மற்றுமொருவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்தவரும், யாழ். ஆயுள் வேதக் கல்லூரியின் முதலாண்டு மாணவருமான இளைஞர் இந்துரைராசா ஆவர். அடிகாயங்கள். சித்திரவதைகளுக்கு ஆளாகியபின் வைத்தியசாலையில் அவரது ஆவி பிரிந்தது.

இங்ஙனம் அகப்பட்டுக் கொண்டபின் உயிரோடு தப்பிப் பிழைத்தவர்களுள் ஒருவர் ஐம்பது வயதைத் தாண்டியவர். மரணப்பிடியில் இருந்து அவரது வயது அவரைக் காப்பாற்றி இருக்கக்கூடும். அடுத்தவர் மரணப்பிடியில் இருந்து வைத்தியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையால் காப்பாற்றப்பட்டார்.

இம்மரணங்கள் குறித்துப் பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. தற்போதைய துணைப் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தலைமையில் மேற்படி மரணங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு ஒரு தெரிவுக்குழுவும் நியமிக்கப்பட்டது. இம்மரணங்கள் குறித்து மேலும் விசாரிக்கப்பட வேண்டுமென்பதே தெரிவுக்குழுவின் விதந்துரையாகும்.

மேற்படி கொலைகள் அப்போது யாழ்ப்பாணத்துக்குப் புதியன.! ஆகவே கடையடைப்பு, கறுப்புக்கொடி, பாடசாலைப் பகிஷ்கரிப்பு எல்லாம் அவசரகாலக் கெடுபிடிகளின் மத்தியிலும் அவ்வாண்டிலும் தொடர்ந்து நடைபெற்றுவந்தன.

தற்பொழுதோ இத்தகைய மரணங்கள் சர்வசாதரணமாகிவிட்டன. பாதுகாப்புப் படையினருக்கும், போராளிகளுக்கும் இடையே நடைபெற்ற கடும் துப்பாக்கிப் பிரயோகத்தின் குறுக்கே சிக்கிக் கொண்டார்கள் என்று பகரப்படும் அல்லது முகாமைத் தாக்க வந்த பயங்கரவாதிகள் சுடப்பட்டார்கள் என்று கூறப்படும் இறந்தவர்கள் ஒய்வூதியம் பெற நிரையில் இடம் பிடிக்க முந்திக்கொள்ள முனைந்த விருத்தாப்பியராகவும் இருக்கலாம், பாடசாலை மாணவர்களாகவும், தொழிலாளர்களாகவும் இருக்கலாம். யாவருக்கும் ஒரே நாமகரணம் பயங்கரவாதிகள் என்பதே!

நினைவில் நின்ற ஜூலை மாதத்தை நினைவுகூரும்போது இன்பம், செல்வம், பாலேந்திரா, இந்துரைராசா, இராயேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரும் நினைவுகூரப்படவேண்டியவர்களே! இவர்களது மரணங்களையொட்டிய நீதி விசாரணை நடைபெற்றுக் கொலையாளிகளைக் கண்டுபிடிக்குமாறு உள்ளூரில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் வலியுறுத்தி வந்திருப்பது போன்றே சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச யூரார்கள் குழு மற்றும் மனிதவுரிமைகள் குழுக்களும் வலியுறுத்தி வந்துள்ளன.

இப்போது இப்படி இறந்தவர்களை யாழ்ப்பாணம் அத்தனை விரைவில் மறந்துவிட்டதா? லொறிகளின் சுதந்திரமான போக்குவரத்துக்கு இராணுவ முகாம்களில் பெறப்படவேண்டிய போக்குவரத்துச் சீட்டுக்கள் வாயிலாகப் போடப்பட்டிருக்கும் அநியாயமான தடைகள் முறியடிக்கப்படவேண்டியனவே! அதற்காக நடாத்தப்படும் கடையடைப்பின்போது அதற்கு மேலும் வலுவூட்ட 1979 ஜூலைத் திங்களில் படுகொலை செய்யப்பட்ட அந்த ஆறு இளைஞர்களையும் நினைவு கூருவதில் தப்பில்லையே!

அப்பாவி மக்களின் மரணங்களுக்கு நீதி கோருவோம்! சம்பந்தபட்ட கொலைஞர்களை நீதி விசாரணைக்கு இன்று அல்லாவிடினும் என்ருே ஒரு நாள் நிறுத்திய தீர்வதென்று இந்நாளில் உறுதியெடுப்போம்.

ஆஸ்திரிய நாட்டின் ஜனதிபதியாக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட முன்னுள் ஐ. நா பொதுச்செயலாளர் வால்ஹெய்ம் அவர்களையே ஹிட்லரின் ஆட்சியில் எப்போதோ நடந்த இனக்கொலைகளுக்காக குற்றஞ்சாட்டஎத்தனிக்கப்படுகையில் இன்றையநடப்புக்கள் குறித்து தமிழினம் அசமந்தமாக இருந்துவிடப்போவதில்லை என்பதைச் சம்பந்தப்பட்டோருக்கு உறைப்பாக உணர்த்தப்பட்டாலன்றி அப்பாவிகளது மரணங்களைத் தவிர்த்தல் சாத்தியமற்றது. சர்வதேச மனிதவுரிமைகள் இயக்கங்கள் செவிகளுக்குத் தமிழனின் அழுகுரல் எட்டுமாக!

# ஆரம்பக் கல்வி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விப் பாடசாலைகளும் நிறுவப்பட்டன.

சமயக் குழுவினர் ஆரம்பக் கல்வியைக் கிராமங்கள் தோறும் நியமப் பாடசாலைகளை நிறுவியளித்தனர். இங்கிருந்து திறமையும், ஆர்வமுங் கொண்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆங்கிலக் கல்வியை அளித்தனர். இத்தகையோர் மதமாற்றமும் செய்யப்பட்டனர். ஆங்கிலக் கல்வி பெற்ருேர் அரச உத்தியோகங்கள் பெற்றுச் சமூக நிலையிலும் செல்வாக்கிலும் உயர்ந்தனர். இத்தகைய கல்வி சமூகப் பெயர்வுக்கு வழிவகுப்பதால் பலர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பினர். கிராமப்பள்ளிக் கல்வி விருத்திபெற்றது.

1834இல் கோல்புறூக் ஆணைக்குழுவினர் கல்வியைக் பரப்புவதில் ஈடுபாடு கொண்டிருந்த சமயக் குழுக்களைப் பாராட்டினர். இவர்களுக்கு அரச நிதியுதவி செய்யவேண்டுமென்று தபது அறிக்கையில் குறிப்பிட்டனர். இலங்கையில் சமயச்சார்பான பாடசாலை முறைமை உருவாவதற்குக் கால்கோள் இடப்பட்டது. இக்காலத்தில் இருந்த அரச பள்ளிகள் சிறப்பாக இயங்கவில்லை. சுதேச மொழிகளில் எழுத வாசிக்கக் கற்பிக்கப்பட்டது. ஆசிரியர்களில் அநேகமானோர் தகுதியற்றவர்களாக இருந்தனர். ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன இல்லாதிருந்தன.

கோல்புறூக் குழுவினரின் விதப்புரையில் அரச நிருவாகம் செய்வதற்கு வேண்டியோரை இலங்கையர்களிலிருந்தே தெரிவு செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. இதனல் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது. சுயமொழிப் பாடசாலைகள் ஆங்கிலப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. இதனல் சுதேசமொழிக் கல்விக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

(அடுத்த வாரம் முற்றும்)

## டெக்னிக்கல் என்ஜினியரிங் இன்ஸ்ரிடியூட்

TECHNICAL ENGINEERING INSTITUTE

★ எலக்ரோனிக்ஸ் அன்ட் ரேடியோ, T. V ரிப்பியாரிங்,
★ ஆட்டோமோபைல் ரிப்பியாரிங்,
★ எயார்கென்டிசனர் அன்ட் ரேப்பிரிஜிரேட்டர் ரிப்பியரிங்,
★ எலெக்ரிக் வயரிங்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்
C/o PILOT INSTITUTE,
151, செம்மணி றேட், நல்லூர்.
(கல்விக்கந்தோருக்கு அண்மையில்) (A 795)

## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா

★ கிளீனேர்ஸ்
★ டிரைவர் (Driver)
★ பாதுகாப்பு உத்தியோகத்தர்

ஆகியவற்றுக்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

இ. கந்தசாமி,
மாவடி சந்தி,
வட்டுக்கோட்டை.

C 3555

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

குவைற்

டிரைவர்(Driver), பணிப்பெண்

சவுதி அரேபியா

கிளீனேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கட்டிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

### Group Atlantic Travels

163, HOSPITAL ROAD,
JAFFNA. (A797)

## இடமாற்றம்



உவைஸ் ஆகிய நான் இதுவரைகாலமும் நியூ டீசன்ஸ் அமைப்பாளராக கடமையாற்றி மேற்படி ஸ்தாபனத்திலிருந்து விலகி தற்போது புதிய றஹூமத் ரெயிலர்ஸ் என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்துள்ளேன் என்பதை எனது சகவாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்அறியத்தருகிறேன். உங்கள் ஆதரவுக்கு நன்றி.

றஹூமத்
ரெயிலர்ஸ்,

(மலாயன்கபே முன்பாக)
5, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(3569)

# நெஸ்பிறே பருகி வெற்றியீட்டுங்கள்!

## ஒவ்வொரு பக்கெட்டிலும் அன்பளிப்பு... புலமைப்பரிசில் வெல்வதற்கான வாய்ப்பு.




நெஸ்பிறே அருந்துவோரே!

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நெஸ்பிறே, உடன் நெஸ்பிறே பக்கெட்டிலும் உங்களுக்கு இலவச அன்பளிப்பு. அத்துடன், ரூ. 10,000 பெறுமதியான புலமைப்பரிசில் ஒன்றை வெல்லும் அதிஷ்டம் உங்களுக்குக் கிடைக்கலாம்.



### இலவச அன்பளிப்புகள்

விசேட ஊக்குவிப்பு விளம்பரத்தை முகப்பில் கொண்ட ஒவ்வொரு நெஸ்பிறே பக்கெட்டினுள்ளும் பின்வரும் இலவச அன்பளிப்புகளில் ஒன்று இருக்கும்: நான்கு அற்புதமான குறிப்பேடுகள் இரண்டு சிறந்த நிறப் பேனைக்கள்.

### நெஸ்பிறே புலமைப்பரிசில்கள்

ஒவ்வொரு நெஸ்பிறே குறிப்பேட்டின் பின் அட்டை இடதுப்க்க அடி மூலையிலும் 1,2,3, அல்லது 4 என்று இலக்கமிடப்பட்ட, கிழித்தெடுக்கக்கூடிய அடையாளத் துண்டுகள் உள்ளன. இவை நான்கையுமே சேகரித்து, உங்கள் பெயர், முகவரியை எழுதி, கூப்பனில் காணப்படும் வாக்கியத்தையும் பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

நெஸ்பிறே புலமைப்பரிசில் போட்டி
த.பெ.எண் 189, கொழும்பு.

### விதிகள்.

(அ) ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 1, 2, 3, 4 ஆகிய நான்கு இலக்க அடையாளத் துண்டுகளும் இணைக்கப்பட வேண்டும்.
(ஆ) விண்ணப்பங்கள் தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
(இ) போட்டி 1986 ஒகஸ்ட் 15 வரை நடைபெறும். ஆகவே, விண்ணப்பங்கள் அத்திகதியில் அல்லது அதற்கு முன்பு எமக்குக் கிடைக்க வேண்டும்.
(ஈ) வெற்றியீட்டும் 5 பேரைத் தெரிவுசெய்வதற்கான சீட்டிழுப்பு 1986 ஒகஸ்ட் 18 நடத்தப்பட்டு, முடிவுகள் இந்தப் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.
(உ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. எவ்வித கடிதத் தொடர்புக்கும் இடமில்லை.
(ஊ) நெஸ்லே நிறுவனம், நியமிக்கப்பட்ட நெஸ்பிறே விற்பனை நிலையங்கள், தொமஸ்ன் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கையில் வாழும் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

கூப்பன்:
பெயர்: ______
முகவரி: ______
நெஸ்பிறே-வளரும் ______ ______

வெல்லுங்கள்! ஒவ்வொன்றும் ரூ 10,000/- கொண்ட 5 புலமைப் பரிசில்கள்




JWT NL 1956 Licence No S 522

**நெஸ்பிறே-வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.**

A 773

## ஓராண்டு நினைவஞ்சலி



அரியரத்தினம் மதியாபரணம் அவர்கள்

(நெற் களஞ்சியப் பொறுப்பாளர்)

தோற்றம்: 16-04-1933
மறைவு: 30 - 07 - 1985

அன்பின் திருவுருவே! எம் இல்லத்தின் ஒளி விளக்கே! எங்களுடன் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்த தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுச் சென்று ஓராண்டு மறைந்தாலும் இன்னும் எம் நெஞ்சில் சிரஞ்சீவியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்.
"இந்து சிட்டி"
புலோலி தெற்கு,
புலோலி. (C-3582)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ நெதர்லண்ட் ★ ஜேர்மனி
★ பிரான்ஸ்

ஆகியநாடுகளுக்கு அனுபவம் நிறைந்த எமது முகவருடன் உங்கள் பயணத்தைத் தொடருங்கள்.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வதற்கும் மற்றும் பாஸ்போட், விசா, பொண்ட், ரிக்கற் யாவற்றிற்கும்:

**ரஜீவன் ரவல்ஸ்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665.

[C-3571]



## பிரயாண ஒழுங்குகள்

**சவூதி அரேபியாவுக்கு**

உணவு பரிசாரகர்கள் (Catering), கிளீனர்கள்
தமிழ், முஸ்லிம் ஆண், பெண்களுக்கும்

சிங்கப்பூர், பாரெயின், ஓமான்,
சவூதி, குவைத், டுபாய்

ஆகிய இடங்களுக்கு வீட்டுப்பணிப் பெண்களுக்கும் உடனடியாக பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளப் படும். பாஸ்போட் மற்றும் 6 புகைப்படங்களுடன் நேரில் சந்திக்கவும்.

பிரான்ஸ், டென்மார்க், கனடா
ஆகிய இடங்களுக்கும் பிரயாண ஒழுங்குகள், பாஸ்போட், பொண்ட் என்பன விரைவில் செய்து தரப் படும்.

**K. S பஞ்சரத்தினம்,**
நில அளவையாளர்.
நெல்லியடி மின்சாரசபை உப அலுவலகம் அருகாமை
கரவெட்டி.

(C 3532)



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்,
★ கனடா
(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

உடனடியாக
எமது காரியாலயத்தில்
பதிவுசெய்துகொள்ளவும்.

★ சவுதிஅரேபியா
கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள்
20 நாட்களுக்குள்
செய்து கொடுக்கப்படும்.

(i) வைத்தியசாலை
(ii) விமான நிலையம்
(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்

மற்றும்:-
★ லிபியா ★ குவைற்
★ டுபாய் ஆகிய நாடுகளுக்கும்
உடனடி பிரயாண ஒழுங்குகள்
செய்துகொடுக்கப்படும்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

**யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(பெற்ரேலியம் கூட்டுத்தாபன முன்பாக,
ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)

(A 796)


## திருவிளக்கு பூசை

யாழ்ப்பாணம், சுனி கொக்குவில் மேற்கு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தின் ஒன்பதாவது திருவிளக்குப் பூசை நாளை திங்கட்கிழமை மாலை நடைபெறும். பூசையில் கலந்து கொள்ள விரும்புவோர் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். [செ]

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

**செல்வன் சண்முகானந்தன் வினோதன்**

அராலி மேற்கு சண்முகானந்தன் -மேனகாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் வினோதன் 20-07-86 [இன்று] ஞாயிற்றுக் கிழமை தனது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, மாமிமார், மாமாமார், சித்திமார், சித்தப்பாமார், மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும்கற்று சிறப்புடன் வாழவாழ்த்துகிறார்கள்.

(C 3559

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**செல்வன் முஜினுத் (முஜீன்)**

மானிப்பாயைச் சேர்ந்த குலசேகரம் புஸ்பராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் முஜீன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (20 - 07 - 86) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா (Spain), அம்மா, நதீஸ் அண்ணு (Uduvil Girl's College), அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அத்தைமார், சித்தப்பாமார் சித்திமார், மகேந்திரன் மாமா [Technical Co lege], அண்ணுமார், அக்காமார், மற்றும் உற்றார், உறவினர்களும் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

[C 3065]


## கொப்பரு தேவை

வாங்குமிடம்:
**சோதி ஸ்ரோஸ்**
கோண்டாவில் சந்தி.

[A-791]



## Computer Programming
and
## Data Processing Course

Basic Language 6 Months
Weekend Classes by qualified and experienced Panel of lecturers

Commencement — 27th July 1986.

Fees: 1500/-. தவணைமுறையிலும் செலுத்தலாம்.

60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals
Ideal for those who seek employment abroad.

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்

ICMA, AAT, IDPM, IAB, Radio and T. V. Engineering, TOEFL வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**CANTABIA INSTITUTE**
[Pioneers in Computer Education]
21, MAIN STREET, JAFFNA.
PHONE: 24201.

[A-758]



## பிரயாண ஒழுங்கு

**கனடா, டென்மார்க்.**
**சவூதி அரேபியா**

கனடா, டென்மார்க் ஆகிய இடங்கட்கு
எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளின்றி உடன் அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு
தொழிலாளர், ஆஸ்பத்திரி கிளீனர்
[Hospital Cleaner]
வேலைகட்கு உடன் ஆட்கள் தேவை.

26ம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

**N. பாலா,**
கோண்டாவில் கிழக்கு,
திருச்செல்வம் வீதி
கோண்டாவில்.

பஸ்வழி இல: 764
பலாலி வீதி.

[C 3560]



THE BEST IN JAFFNA FOR

★ Food
★ Service and
★ Comfort

is always available at

## Hotel Gnanams
Under a new Management

Relax at the Beer Garden

★ ENJOY THE BEST CHINESE MEALS.
★ HOT AND COOL DRINKS.
★ LUNCH AND SHORT-EATS.

Etc. Etc. Etc.

Open from 9-30 a. m. to 11-30 p. m. Daily

WHERE OUR STANDARDS ARE HIGH.

**HOTEL GNANAMS**
299, CLOCK TOWER ROAD, JAFFNA.
Telephone: 22082 — 23067

[A-800]

## கந்தளாயில் 10 பேர் கொலை

மூதூர், சனி

கந்தளாய் சீனிக்கூட்டுத்தாபனதிற்கு 4 மைல் தொலைவில் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று பத்துபேரைக் கொலை செய்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு இச்சம்பவம் நடந்துள்ளது

படுகொலைசெய்யப்பட்டவர்களில் 7 சிங்களவர், 2 முஸ்லிம், 1 தமிழர் அடங்குவரென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## இவ்வாரம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

### துலாம்

எப் பக்கம் திரும்பினுலும் ஆதரவு கொடுக்க அன்பர்கள் முன் வருவார்கள் வெளியிடத் தொடர்புகளில் சிறப்புத் தென்படும். தயக்க நிலை நீங்கும். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் கிட்டும். தெய்வத்தின் துணையுமுண்டு.

### விருச்சிகம்

முரமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கை வேண்டும். பணம் பறிபோக இடமுண்டு. வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும் சிலர் வீண் பழிக்கும் ஆளாவார்கள். விவசாயிகளுக்கும் தொல்லையுண்டு.

### தனுசு

மனப் போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவருடன் கைகலப்பு ஏற்படலாம். எதிர் பாரத்ததில் ஏமாற்றம் ஏற்படும். உடல் நலம் பாதிக்கப்படலாம். மாணவர்களுக்களுக்கும் போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

### மகரம்

கனிவான நினைவுகள் தலை தூக்கும். பிறருடன் பகைத்துக் கொள்ள நேரும் இருக்குமிடத்தில் ஆதாவு பெருகும். முத்தான சந்திப்பும் முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும். நண்பர்களும் உதவுவதற்கு முன் வருவார்கள்.

### கும்பம்

சகோதரி ஒருவரின் பிரச்னை மனதுக்கு வேதனை தரும். உள் வீட்டிலேயே பூசல்கள் உருவாகும். அவப் பெயருக்கும் இடமேற்படலாம்; குறுக்கு வழியில் இறங்க வேண்டாம். அமைதி வேண்டும்.

### மீனம்

மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான வாரம் கல்வித் துறையில் முன்னேற்றம் உண்டு. தாய் வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுக்கும் இடமுண்டு. அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**


**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் சரிதா நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30, 2-30. 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill


## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுருவில் ஐயனார் தேவஸ்தானத்தில் இன்று சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது, மேற்படி ஆலயத்தின் பிரதம குருவான பிரம்மஸ்ரீ நடராசாக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இச் சங்காபிஷேகத்தையொட்டி யாக பூஜையும் நடைபெறும், (மா)

## இன்று மஹாயாகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு


நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை மஹாயாகம் நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு மஹாகணபதி ஹோமம் ஆரம்பமாகி நண்பகல் வரை நடைபெறும். மாலை 2 மணிக்கு சிவபெருமானுக்கு அதிவிஷேச மிருத்திஞ்ச ஹோமம் ஆரம்பமாகி தொடர்ந்து 6 மணி வரை நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு மஹாலக்ஷ்மிக்கு விஷேச கும்ப பூஜை நடைபெற்று குபேரசம்புடிதி மஹாலக்ஷ்மி ஹோமமும், சூத்த ஹோமங்களும் நடைபெறும். அதைத்தொடர்ந்து நவக்கிரக விஷேச பூஜையும் விஷேச ஹோமமும் பூஜை முதலானவைகளும் நடைபெறும். (வா)

21-7-86 அன்று

குலசேகரம்
கெங்காதரன்
(அப்பன் ஹீரோராஸ்)
அவர்களின்
**45-ம் நாள் நினைவஞ்சலி**



அன்னையின் மடியில்: 8-9-1961
தமிழன்னையின் மடியில்: 7-6-1986

சோரா ஊக்கத்
துணிவாளன்
சுடர்பல்லைக் கீரோராஜ்
அன்று...
கிளிநொச்சித்
தெருமுனையில்
பேரினவாதக் குண்டர்
பேய்ப்படையை
எதிர்கொண்டு
போரிடுங்கால் மாண்டு
பொன்னுலகம்
சென்றிட்டான்
வறிய குடும்பத்தின்
வாட்டம் நினையாமல்
சிறுமைப்படுமினத்தை
சிறப்பிக்க உயிர் தந்த
வேங்கை மறவா
விடியல்தனை நோக்கி
ஒங்கும் அணி நாம
உன்னைத்தினம்
நினைவோம்

நண்பர்கள்.

ஏழாலை,
மல்லாகம். (C3594)

## யாழ்ப்பாணம் நோக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

'பரந்தன் சந்தியை இராணுவத்தினர் அண்மித்த பொழுது, விடுதலைப்புலிகள் மறைந்திருந்து 'தொலைநோக்குக்' சண்ணடி பொருத்தப்பட்ட சக்திவாய்ந்த துப்பாக்கியால் சுட்டபொழுது இராணுவத்தினரில் சிலர் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் இராணுவத்தினர் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு பிற்பகல் 3 மணியளவில் மீண்டும் முகாம் நோக்கித் திரும்பிச் சென்றதாகவும். தமது தரப்பில் எதுவித இழப்புமேற்படவில்லை என்றும் புலிகளின் குரல் தெரிவிக்கின்றது.

முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் பொதுமக்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இச்சம்பவத்தில் அரசாங்க ஊழியரான ஆனந்தராசா எனபவர் ஸ்தலத்திலே பலியானர். மேலும் சிலர் படுகாயமடைந்தனர். (மா)

## தீர்க்கமான ..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்:

கூட்டணிக் குழுவுக்கும், ஜனதிபதிக்கும் இடையே எதிர்வரும் திங்களன்று நடைபெறவுள்ள நேரடிப்பேச்சுக்களில் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான நகல் திட்டம், கூட்டணிக்குழுவிடம் கையளிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (பி)

21-7-86 அன்று

சின்னத்துரை
மனோகரன் (தீசன்)
அவர்களின்
**45 ஆவது நினைவஞ்சலி**



அன்னையின் மடியில் 28-5-1965
தமிழன்னையின் மடியில் 7-6-1986

சோகம் துயிலெழுப்பத்
துவண்டு விழிததும்பும்
யோகம் படைத்த
ஓரினத்துஉயிர் கொடுக்க
நாசப் படையின்
நடுநின்று போரிட்ட
தீசன்
கிளிநொச்சி ரணகளதகில்
வானுறுரூன்
ஊர்மலை என்ற
ஒப்பில் பெருவீரர்
நீர் எங்கள் கண்ணில்
நெருப் பெங்கள் நெஞ்
செல்லாம
துணிவும் பொறையும்
சுருண்டு விழுந்தனவோ
அணியும் விளக்கேயாம்
அஞ்சலிகள் என்
றென்றும்

சின்னத்துரை-
குடும்பத்தினர்,
நண்பர்கள்.

பூம்புகார்,
ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.
C 3593

'பெரி'ஸ்கோப்

## கலைகின்ற வேஷங்கள் !

என்னதான் இருந்தாலும் 'ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியருக்கு இப்படியொரு கோபம் பொத்துக் கொண்டு வந்திருக்கவும் வேண்டாம்! அக் கோபத்தை அவர் தமது தலையங்கத்தில் 'தூள்பறக்க'க் காட்டி 'உபாலி குறூப் யின் உள்ளந்தரங்கத்தைச் சந்தி சிரிக்சச் செய்திருக்கவும் வேண்டாம்!

அதுசரி, இப்படியொரு கோபம் வருமளயுக்கு என்னதான் நடந்து விட்டது?

இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண எமது அரசு முன் வைததுள்ள யோசனைகள் பற்றி 'உபாலி குறூப்'பின் ஒரு கோடிக் கண்களான ஆங்கில ஐலண்ட்'டும் சிங்கள 'திவயின'வும் ஒன்றுக்கொன்று முரணுன விதத்தில் வெவ்வேறு கோணங்களில் வெளிச்சம போட்டுக் காட்டுகின்றன என'அத்த'பத்திரிகை அம்பலப்படுத்தி விட்டதாம்!

பூ...! இவ்வளவுதானு? 'ஆங்கில வாசகர்களுக்கு ஒரு மாதிரியும் சிங்கள வாசகர்களுக்கு இன்னொரு மாதிரியுமாகத்தான் எழுதுவோ... அது எமது நிலைப்பாடு... இதுவும் செய்வோம் இன்னதும் செய்வோம் என்ற பாணியில் 'ஐலண்ட்' ஆசிரியரே எழுதும் 'அத்த' பத்திரிகைக்குஏன் இந்த வீண் சோலி? 'இரட்டை வேஷம்' கட்டுவது எங்களுக்கென்ன புதிதான சங்கதியா?

அரசியல் கட்சிகளின் மாநாட்டில் ஒன்றைச் சமர்ப்பித்து விட்டு, 'அதுஇதுதான்' என 'This is the Truth' என்ற மாமூல் குயுக்திப்பாணியில் இந்தியாவுக்குச் சமர்ப்பித்த விபர அறிக்கை' இன்று 'தெளிவுபடுத்தல்கள்' (Clarrifications) என்ற பெயரில் உலகம் பூராவும் அக்குவேறு ஆணிவேருகப் பிச்சுப்பிடுங்கப்படும் வேளையில் கேவலம், 'உபாலி குறூப்' பினது ஒரு சோடிக் கண்கள் இரண்டு வெவ்வேறு காட்சிகளைத் தரிசிப்பது குறித்து 'அத்த' பத்திரிகை இவ்வளவுதூரம் அலட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை!

உள்ளூரையே பயங்கரவரதத்தின் உறைவிடமாக வைத்துக்கொண்டு உலக பயங்கரவாததததை ஒழிக்க உலகளாவிய 'புனிதயுத்தம்' தொடுத்துள்ள அத்தக் 'கவ்போய்' றெகுல்ட்டின் 'இரட்டை விழுமியங்களை'க் (Double Standards) கண்டுகளித்த நாம் இந்த நம்மூர் 'ஐலண்ட்' விலாங்குகளைப் பற்றி ஏன் பெரிது படுத்த வேண்டும்?

ஆனல், ஒன்று—

எவருக்கும் மரணம் நிச்சயம்! ஆனல், இரட்டை வேஷம் போடுபவர்களுக்கு மரணம் நித்தியம்!

பி. கு.

'அத்த' என்ற சிங்களச் சொல்லுக்கு தமிழில் 'உண்மை' என்று பொருள் எங்களைப் பற்றிய பொய்களை நம்பாதவிடத்து, உங்களைப் பற்றிய உண்மைகளைப் புரிந்துகொள்ளும் பெரியார்களுக்கு இங்கு அப்படி ஒரு பஞ்சமும் இல்லை;

**2-வது ஆண்டு நினைவஞ்சலி**



**திரு மாணிக்கம் பத்மநாதன்**

[களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். மாநகரசபை]

மலர்வு: 27-10-1940
உதிர்வு: 09-08-1984

எங்கள் அன்புத் தெய்வமே நின் உயிரைப் பறித்து எம்மை அநாதைகளாக்கினரே நீங்கள் எம்மைப் பிரிந்து ஈராண்டென்ன நாம் வாழும் வரை பரிவும் பாசமும் எம்மனதில் நிலைத்து வழும் எமது கண்ணீர் அஞ்சலியை ஏற்பீராக.

பரமேஸ்வரி
பத்மநாதன்,
பிள்ளைகள்: கோமதி,
கோமகன்.

பரமேஸ்வரி பவனம்,
ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு.
C 3600

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவனசங்கத்தின் சிறுவர் விளையாட்டுப் போட்டி திருமதி. சு சூரசங்கரத்தின் தலைமையில் இன்று காலை நடைபெறும்.

## போல் நல்லநாயகம் விடுதலை

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் தூண்டும் வகையிலும், வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார் என்று கல்முனை பிரஜைகள் குழுத் தலைவர் திரு போல் நல்ல நாயகத்துக்கு எதிராகத்தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி அல்ல என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பிரஜைகள் குழுத்தலைவர் என்ற வகையில் திரு நல்லநாயகம் தமது கடமைகளை தவறுது செய்து வந்துள்ளார் என்பது சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது என கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி திரு கே விக்னராஜா தெரிவித்து இத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

மற்றும், நற்பிட்டி முனையில் இருபத்துமூன்று பேர்கள் கொல்லப்பட்டது தொடர்பாகவும், கட்டிடங்கள் பல எரிக்கப்பட்டது தொடர்பாகவும் விசேட பாதுகாப்புப் படையினர் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடியுமு. இதற்கான ஆதாரங்களும் உள்ளன என்று நீதிபதி தமது தீர்ப்பில் கூறியுள்ளார். (ஐ)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 20-7-86

# "ஆங்கிலமும் தமிழும் அரசமொழியாக்கப்படவேண்டும்"

## அகில இலங்கை சோனகர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, சனி

''பெரும்பான்மை, சிறு பான்மை சமூகங்களிடையே நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தவும், இன ஐக்கியத்தை வளர்க்கவும் தமிழும் அங்கிலமும் அரசாங்க மொழியாக்கப்படவேண்டும்''

அகில இலங்கை சோனகர் சங்கம் ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கோரியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பெம்பான்மையான முஸ்லீம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவும் ஒரு முஸ்லீம் முதலமைச்சர் ஆகவும் வகை செய்யும் விதத்திலும் முஸ்லீம் சமூகம் துண்டாடப் படுவதைத் தவிர்க்கும் வகையிலும் மாகாணசபை அமையவேண்டும். தேசிய, மாகாண மட்டங்களில் படைகளுக்கு ஆள் திரட்டுவது இன அடிப்படையிலும் அமையவேண்டுமென்பதுடன், அதை அந்தந்த மாகாண சபைகளே தீர்மானிக்கவேண்டும்.

கல்வியைப் பொறுத்தளவில் சகல விவகாரங்களிலும் மாகாணசபைகளுக்குப் பூரண அதிகாரம் வழங்கப்படவேண்டும் என மேற்டி மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [ஷ]

## மாணவர் உட்பட ஐவர்சுட்டுக்கொலை

வவனியா, சனி

நெடுங்கேணியில் நேற்று நடைபெற்ற மற்றொருசம்பவமொன்றில் ஒரு பெண் உட்பட ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கென்ட், டொலர் பாம் ஆகிய முகாம்களிலிருந்து வந்த ஆயுதப்படையினரே இவர்களைச் சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் பாடசாலை மாணவனான சிவலிங்கம் விவேகானந்தன் [17 வயது]. நடராசுசிவபாக்கியம் [42 வயது] சுப்பிரமணியம் சபாரட்ணம் [30 வயது]. தியாகராசா மயில்வாகனம் [22 வயது] குமாரசாமி வேலுப்பிள்ளை ஆகியோரே பலியானவர்களாவர். [பி]

## கிளிநொச்சிப்பகுதியில் திருட்டு அதிகரிப்பு

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சியில் மக்கள் வெளியேறியுள்ள பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

பொதுமக்களின் வீடுகளை உடைத்து இவர்கள் பெறுமதியான பொருள்களை திருடி வருகிறார்கள்.

கனகபுரத்தில் உள்ள ஆசிரியர் சண்முகராசாவின் வீடு உடைக்கப்பட்டு பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. மற்றுமோர் ஆசிரியரான தெய்வேந்திரனின் வீடும் மணியம் என்பவரின் வீடும் உடைக்கப்பட்டு பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன,

இதே வேளை கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவிலும் சில பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ள.

## சீர்குலைந்த நிலையில் தொலைபேசி!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். நகரிலிருந்து சகல இடங்களுக்குமான உள்ளூர், வெளியூர் தொலைபேசி சேவைகள் யாவும் நேற்று அதிகாலை தொடக்கம் செயலிழந்தன.

பண்ணையிலமைந்துள்ள தொலைபேசித் தொடர்பு நிலயத்தில் கடமையாற்றுவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை காலை சென்ற ஊழியர்கள் சில இனந்தெரியாத இளைஞர் குழுவினால் திருப்பி அனுப்பப்பட்டனர். அதன் பின்னரும் அன்று நள்ளிரவு வரை தொலைபேசிச்சேவைகள் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

## சடலங்கள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம் ஞாயிறு

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தையில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களுள் சில இராணுவத்தினரின் சடலங்கள் மாந்தை குளத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகளால்இராணுவத்தினரின் சடலங்கள் அழுகிய நிலையில் அங்கமங்கமாக குளத்தில் மிதந்து கிடப்பதைக் கண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 14ம்திகதி கண்ணிவெடிச்சம்பவம் இடம்பெற்றதும் அதில் சென்ற இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (மா)

## பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குகிறது —சிவ்சங்கர்

புதுடில்லி, ஜுலை, 19

''பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுதங்களையும். வாகனங்களையும் வழங்கி வருகின்றது. இவற்றுள் சில பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவை. ஏனையவை வெளி நாடுகளிலிருந்து பாகிஸ்தான் இறக்குமதி செய்து இலங்கைக்கு கொடுத்துதவியவையாகும்''

இவ்வாறு இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. பி. சிவ்சங்கர் லோக்சபாவில் நேற்று பேசுகையில் கூறினார்.

திரு சிவ்சங்கர் தொடர்ந்து பேசுகையில், இலங்கையிலிருந்து கடந்த 9ம் திகதி வரை மொத்தம் ஒரு லட்சத்து இருபத்தேழாயிரத்து நூற்று ஐம்பத்தேழு அகதிகள் இந்தியா வந்துள்ளனர். என்றார்.

அத்துடன் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து இந்தியா வந்துள்ள தமிழ் அகதிகளுக்கு உதவித்தொகையாக 1983 ம் 84 ம் ஆண்டுகளில் அறுபத்தெட்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், 1984ம் 85ம் ஆண்டுகளில் ஒரு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து பதினெட்டாயிரம் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பி)

## பௌத்தமஹா சங்கத்தினருக்கு விளக்கம்

கொழும்பு, சனி

அரசியல் கட்சிகளின் மாநாட்டில் அரசாங்கம சமர்பித்த ஆலோசனைகளை பௌத்த மகாசங்கத்தினருக்கு விளக்குவதற்கான முதலாவது கூட்டம் நேற்று காலை போக்குவரத்து அமைச்சில் நடைபெற்றது.

இவ்வாலோசனை பற்றிய கருத்துக்களை அமைச்சர் லலித் அத்துலத்முதலி அங்கு சமூகமளித்திருந்த எழுபத்தைந்திற்கும் மேலான பௌத்த மகாசங்கத்தினருக்கு விளக்கிக் கூறினார். (சிவ)

## அடம்பன் தாக்குதலில் இராணுவத்தினர் பலர் பலி

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம் ஞாயிறு

மன்னார் அடம்பன் பகுதியை கடந்த 13ம் திகதி சுற்றிவளைத்த அன்னியப்படைகளை எதிர்த்து மக்கள் விடுதலைப் படை போரிட்டதில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதுடன் எமது அலுவலகமும் பாதுகாக்கப்பட்டது என்று ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''எதிரியின் சுற்றிவளைப்பை முறியடிப்பதற்காக இறுதி வரை போரிட்டத்தில் ஈ பி. ஆர்.எல் எவ். வன்னிப் பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்கள் விஜே, பெண்போராளி பானு ஆகியோரும் மக்கள் விடுதலைப்படை வீரர்களான பெண் போராளி ஜெயந்தி, வாசன், டக்கிளஸ், ஸ்டீபன், ஜோண், ஜோர்ஜ், சோதி, றேபன் ஆகியோரும். ஈழப் பெண்கள் விடுதலை முன்னணித் தோழர் ரூபிகாவும் கௌரவப் பிரஜைகளாகக் களத்துமேட்டில் குருதிசிந்தினர்.

நவீனரக ஆயுதங்களுடன் நம்இனியதேசத்தை விழுங்க வரும் எதிரிகளை நாம் அனைவரும் ஒன்றுபட்டு எழுந்துநின்று முறியடிக்க வேண்டும். மாகாண சபைகள் அரசியல் கட்சிமாநாடுகள் என்று ஒரு புறம் கூச்சலிட்டபடியும்எமது மக்களைக் கொன்றொழிக்க தமது கொலை பாதக படைகளை மறுபுறம் ஏவிவிட்டபடியும் இரட்டைவேடமிடும் எதிரியை இனங்கண்டுமுறியடிக்க அனைத்து மக்களும் தயாராக வேண்டும். இதுவரை சிந்தப்பட்டகுருதிக்கும் நாம் இழந்த இன்னுயிர்ப் போராளிகளுக்கும் நாம்செலுத்தும் முழுமையான அஞ்சலி முழுவிடுதலையை போரிட்டு வென்றெடுப்பதேயாகும்.

போராளிகளால்கொல்லப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கை அவர்கள் இழப்புக்களுக்கு நிகரானதல்ல ஒருநூறு எதிரிப்படைகள் கொலலப்பட்டாலும் ஒரு வீரப்போராளிக்கு ஈடாக முடியாது ஈழத்தின்விடுதலை ஈழமக்களின் மகிழ்ச்சியான வாழ்வு இதுவே போராளிகள் கனவு. தொடரும் போராட்டத்தில் போராளிகளின் கனவுகள் நிஜமாக்கப்படும். நாமும் நமது மக்களும் இறந்தவர்கள் சாதிக்க நினைத்தவற்றை நிச்சயம் நிறைவேற்றுவோம். அடம்பன் பகுதியில் அந்நியப்படைகளை எதிர்த்து வீரமுடன் போரிட்டு மரித்த சக இயக்கப்போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம். எதிரிப்படைகளால் படுகொலையான மக்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம். [து]

## அஞ்சலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த 13ம் திகதி வவனியா இராணுவ முகாமிலிருந்து வந்து பூவரசங்குளப் புலவநாணூர் பகுதியை முற்றுகையிட முயன்ற சிறீலங்கா இராணுவத்தினரை எதிர்த்து மக்கள் விடுதலைப்படையினர் எதிர்த் தாக்குதல் நடாத்தினர். இதில் பல இராணுவத்தினர் படுகாயமடைநதனர். இத்தாக்குதல் நடவடிக்கையின் போது மக்கள் விடுதலைப்படை வீரரான அமலன் வீரமரணமடைந்தார். மக்களின் விடுதலைக்காக மரணித்த தோழனுக்கு எமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றோம், என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுங்கேணிச் சம்பவம்: காயமடைந்தவர்களில் மேலும் இருவர் பலி

யாழ்ப்பாணம் ஞாயிறு

நெடுங்கேணியில் வடபிரதேச போக்குவரத்துச் சபை பஸ் மீது ஹெலிகொப்டர் தாக்கியதில் காயமடைந்தவர்களில் மேலும் இருவர் இறந்துள்ளனர்.

யாழ் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜோதி ...லன் என்பவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்காக கொண்டுவரப்பட்ட மீன் வியாபாரியான பைசால் என்பவருமே இறந்தவர்களாவார்.

தற்சமயம் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருபவர்கள் விபரம்: ஆர். கணபதிப்பிள்ளை [34 வயது] சாவகச்சேரி, பி. மோகனவதி [22 வயது] முள்ளியவளை, ஏ. சசிதரன் [4வயது] ஓமந்தை, சிவானந்தன் [22 வயது] முல்லைத்தீவு, சந்திரகுமார் [10 வயது] நெடுங்கேணி, சிவபாக்கியம், (40வயது) முல்லைத்தீவு எஸ் மகாலிங்கம் [43வயது) ஆனைக்கோட்டை, என். கனகமஞ்சுகரன் சட்டத்தரணி யாழ்ப்பாணம். [ஐ]

## ரூ.2 ஆயிரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மண்டைதீவில் கொலையுண்ட குருநகர் மீனவர் குடும்பங்களுக்கு, உதவும் முகமாக 'யாழ். உதைபந்தாட்ட லீக்' இரண்டாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

மேற்படிப் பணததை யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப், குருநகர் கடல்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. செபஸ்தியாம்பிள்ளையிடம் கையளித்தார். [வி]

## பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட கிளை அலுவலகம் நடாத்தும் நடமாடும் பயிற்சி நிலையம் நாளை 21-ம் திகதி காலை உரும்பராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (மா)

## பூநகரி சம்பவம்: பிரஜைகள் குழு புகார்

பூநகரி, சனி

தற்போது பூநகரி மக்கள் பயப்பிராந்தியத்தில் வாழுகின்ற பரிதாபநிலை குறித்துப் பூநகரி பிரஜைகள் குழுத்தலைவர் திரு. பொ. தஙகராசா தற்போது கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகத்திற்கு தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

பாதுகாப்பமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு திரு. அமிர்தலிங்கத்திடம் செய்துகொள்ளப்பட்ட மேற்படி முறைப்பாட்டில் பள்ளிக்குடாவில் சில தினங்களுக்கு முன் அப்பாவி மீனவத் தொழிலாளிகள் மீது இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகம் பற்றியும் ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்னர் பூநகரி நாலாம் கட்டையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வேலுப்பிள்ளை. மணிவண்ணன் என்ற இளைஞருக்கு நேர்ந்த கதிபற்றி அறியமுடியாமலிருப்பது பற்றியும் பூநகரி பிரஜைகள் குழுத்தலைவர் விவரித்துள்ளார.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜுலை மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389.
24126